விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

# வலம்புரி

Valampurii

SATS TECH
யாழ்.நகரின் முன்னணி
Satellite & Cable TV நிறுவனம்
DIAL 021 222 5908

பக்கங்கள்: பத்து

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 வைகாசி 13 திங்கட்கிழமை (26.05.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 159

# இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை நிறைவேற்ற ஐரோ. ஒன்றியம் முயற்சி

## உறுப்பு நாடுகளின் ஆதரவுக்காகக் காத்திருப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் உறுப்புரிமையைத் தக்கவைத்துக் கொள்ள இலங்கை தவறியுள்ள நிலையில் ஏற்கனவே இலங்கைக்கு எதிராகக் கொண்டுவர முயற்சித்து போதியளவு ஆதரவின்றி கைவிடப்பட்ட தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் சில உறுப்பு நாடுகள் எதிர்பார்த்திருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (10 ஆம் பக்கம் பார்க்க)

## விலைவாசி ஏற்றம் குறித்து மக்கள் விழிப்படைய வேண்டும்

### ஐக்கிய தேசியக் கட்சி வேண்டுகோள்

(கொழும்பு)

உலக நாடுகளில் விலையேற்றங்களை எதிர்த்து மக்கள் வீதியில் இறங்கிப் போராட்டங்களை நடத்துகின்றனர். ஆனால் எமது நாட்டில் அரசின் ஊழல், மோசடிகள் மற்றும் விலை அதிகரிப்புக்களை மக்கள் கண்டு கொள்ளாதிருக்கின்றனர்.

மக்கள் இது குறித்து விழிப்படைய வேண்டும். வீதியில் இறங்க வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

எரிபொருள்களின் திடீர் விலை ஏற்றம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த ரவி கருணாநாயக்க எம்.பி. மேலும் கூறியதாவது,

உலக சந்தை (10 ஆம் பக்கம் பார்க்க)

## கட்டுநாயக்கவில் தேடுதல் பெண்கள் உட்பட 14 பேர் கைது

(கொழும்பு)

கட்டுநாயக்க அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் நேற்றுக் காலை மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்புத் தேடுதலில் 8 பெண்கள் உட்பட 14 தமிழர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று அதிகாலை 4.30 மணிமுதல் 8.30 மணிவரையான 4 மணிநேரங்கள் இத் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான ரஞ்சித் குணசேகர தெரிவித்தார்.

தேடுதல் குறித்து (10 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனநாயகத்தைக் காக்காவிட்டால் இலங்கை சின்னாபின்னமாகிவிடும்

### இக்பால் அத்தாஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் அவசர காலச் சட்டம் தொடர்ந்தும் அமுல் செய்யப்படுவதைப் போல உத்தியோகபூர்வமாகச் செய்தித் தணிக்கை கொண்டு வரப்படவில்லை.

எனினும் இலங்கையில் போர் நடைபெறும் இடங்களுக்குச் செய்தியாளர் அனுமதிக்கப்படுவதில்லை என்ற விடயத்தை இந்தோனேஷிய பாலி நகரில் இரண்டு வாரங்களுக்கு முன்னர் இடம்பெற்ற சர்வதேச செய்தியாளர் மாநாடு ஒன்றில் தாம் சுட்டிக்காட்டியதாக சண்டே ரைம்ஸின் பாதுகாப்பு ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் ஊடகங்கள், இராணுவத்தினர் போர் தொடர்பாகக் கூறும் கருத்துக்கள் மற்றும் தகவல்களை மாத்திரமே செய்தியாக வெளியிடும் வழமையைக் கொண்டுள்ளன.

அதற்கு அப்பால் சென்று மறுபுறத்தில் தகவல்களைச் சேகரிக்க அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இலங்கை இராணுவம் யுத்தத்தில் இறந்ததாகக் கூறும் போராளிகளின் எண்ணிக்கையை நோக்கினால் அது வடக்குக் கிழக்கில் வாழும் மக்களின் இரண்டு மடங்கினர் இறந்த (10 ஆம் பக்கம் பார்க்க)

## வீரவன்சவின் கட்சியிலிருந்து மற்றொரு கட்சி உருவாக்கம்

(கொழும்பு)

விமல் வீரவன்சவினால் ஆரம்பிக்கப்பட்ட தேசிய சுதந்திர முன்னணியின் முக்கிய உறுப்பினர்களில் ஒருவரான பியசிறி விஜேசேகரவினால் புதிய கட்சி ஒன்று உருவாக்கப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது.

புதிய கட்சி ஒன்றை உருவாக்குவதற்கான விண்ணப்பப்படிவத்தைத் தேர்தல் ஆணையாளரிடம் பியசிறி விஜேசேகர சமர்ப்பித்துள்ளதாகத் தெரியவருகின்றது.

தேசப் பற்றுடைய தேசிய முன்னணி என்ற பெயரில் புதிய அரசியல் கட்சி ஒன்றை ஆரம்பிப்பதற்காக விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. இதன்படி உரிய கட்சியை பதிவு செய்வதற்கான உத்தியோகபூர்வ நடவடிக்கைகளை தேர்தல் ஆணையாளர் மேற்கொள்ள தீர்மானித்துள்ளதாகவும் கட்சியைப்பதிவு செய்வதற்கான நேர்முகப் (10 ஆம் பக்கம் பார்க்க)

## உணவுப் பற்றாக்குறையை நீக்குவதற்கு இலங்கைக்கு உலக வங்கி நிதியுதவி

(கொழும்பு)

உலகளாவிய ரீதியில் ஏற்பட்டிருக்கும் உணவுத் தட்டுப்பாட்டையடுத்து இலங்கை விடுத்த கோரிக்கைக்கு அமைய உணவுத் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு 100 மில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவியை வழங்குவதற்கு உலக வங்கி முன்வந்துள்ளது.

ஏற்கனவே பல்வேறு கடன்களைப் பெற்றிருக்கும் இலங்கையின் கோரிக்கையை சாதகமாக ஏற்றுக் கொண்டு இலங்கைக்கு கடன் வழங்க முன்வந்திருப்பதாகக் கொழும்பில் ஊடகவியலாளர்கள் சிலரைச் சந்தித்த உலக வங்கியின் தெற்காசியப் பிராந்தியத்திற்கான பிரதித் தலைவர் ப்ரவுல் பட்டேல் கூறியுள்ளார்.

இலங்கை கோரிக்கை விடுத்திருந்தது எனினும் எவ்வளவு என்பதைக் கூறுவது கடினமானது. 10 மில்லியன் அல்லது 15 மில்லியன் டொலர்கள் பற்றி (10 ஆம் பக்கம் பார்க்க)

## சகல பஸ் கட்டணங்களும் இன்று நள்ளிரவு முதல் அதிகரிப்பு

(கொழும்பு)

பெற்றோல் மற்றும் டீசலின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் சகல பஸ் போக்குவரத்துக் கட்டணங்களும் இன்று நள்ளிரவு முதல் 27.2 வீதத்தினால் அதிகரிக்கப்படவுள்ளன.

போக்குவரத்து அமைச்சருடன் நேற்று மாலை நடத்திய கலந்துரையாடலின் போதே இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை தனியார் போக்குவரத்து பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் ஹெமுனு விஜயரட்ண தெரிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் ஆகக்குறைந்த பஸ் கட்டணம் 6 ரூபாவி (10 ஆம் பக்கம் பார்க்க)

## ★ வடக்கு மாகாணத்துக்கு வெற்றி ★

## தேசிய மட்ட தமிழ்த் தினப் போட்டியில் யாழ்ப்பாணத்திற்கு 15 முதலிடங்கள்

(யாழ்ப்பாணம்)

கல்வி அமைச்சினால் தேசிய மட்டத்தில் நடாத்தப்பட்ட தமிழ் மொழித் தினப் போட்டியில் வட மாகாணம் 22 முதலிடங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

இவற்றில் யாழ். மாவட்டத்திலிருந்து 15 போட்டிகளில் பங்கு பற்றிய மாணவர்கள் முதலிடங்களைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளனர்.

7 முதலிடங்களைப் பெற்று கிழக்கு, மேல் மாகாணங்கள் முறையே 2 ஆம் 3 ஆம் இடங்களைப் பெற்றுள்ளதாகக் கல்வி அமைச்சின் தமிழ் மொழிப் பிரிவுப் பணிப்பாளர் இரு தயராஜ் தெரிவித்தார்.

வட மாகாணத்திலிருந்து பங்குபற்றிய 5 போட்டிகளுக்கு 2 ஆம் இடங்களும் 6 போட்டிகளுக்கு 3 ஆம் இடங்களும் கிடைத்துள்ளன. முதலிடம் பெற்ற யாழ்.மாவட்ட மாணவர்களின் விபரம் வருமாறு,

ஆக்கத் திறன் - பிரிவு I ப.வினோஜன் (கரவெட்டி மாணிக்க (10 ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரிகா–மங்கள விரைவில் சந்திப்பு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மக்கள் பிரிவு ஏற்பாட்டாளரான மங்கள சமரவீரவுக்கும் இடையில் விரைவில் சந்திப்பு இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் இந்திய விஜயத்தின் பின்னரே இந்த சந்திப்பு இடம்பெறவுள்ளது.

இதன்போது தமது கட்சியுடன் இணைந்து செயற்படுமாறு முன்னாள் ஜனாதிபதிக்கு அழைப்பு விடுக்கப்படுமென சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மக்கள் பிரிவு அறிவித்துள்ளது. (ந–5)

## கிழக்கில் மீண்டும் 'ஜிகாத்' குழு 'லக்பிம' வார ஏட்டில் தெரிவிப்பு

கிழக்கிலங்கையில் முஸ்லிம் ஆயுதக் குழுவான ஜிகாத் மீண்டும் தலைதூக்கியுள்ளது என படைத்தரப்பு தெரிவித்ததாக லக்பிம ஆங்கில வார ஏடு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்த ஏட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கிழக்கில் அண்மையில் தோன்றியுள்ள கலவரங்களுக்கு முஸ்லிம் ஜிகாத் குழுவே காரணம் என்று படைத்தரப்பு தெரிவித்துள்ளது.

கிழக்கிலங்கையில் முஸ்லிம் ஆயுதக் குழுவான ஜிகாத்தின் நடவடிக்கைகள் தற்போது அதிகரித்து வருகின்றன.

அரசின் துணை இராணுவக் குழுவான பிள்ளையான் குழுவுக்கும் முஸ்லிம் ஆயுதக் குழுவுக்குமிடையில் கடந்த வியாழக்கிழமை மோதல்கள் வெடித்திருந்தன.

அங்கு நடைபெற்ற படுகொலைகளைத் தொடர்ந்து அப்பகுதியில் பொலிஸாரும், சிறப்பு அதிரடிப்படையினரும் ஊரடங்குச் சட்டத்தை நடைமுறைப்படுத்தியிருந்தனர்.

முஸ்லிம் மக்கள் அதிகம் வாழும் பகுதிகளில் முஸ்லிம் ஆயுதக் குழுவின் நடமாட்டங்கள் அதிகமுள்ளதாக அப்பகுதி முஸ்லிம் மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை கிழக்கில் சவூதி அரேபியாவின் நிதி உதவிகளுடன் வாகாபிசம் என்னும் தீவிர மதவாதம் வளர்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சவூதி அரேபியா, எகிப்து போன்ற நாடுகளுக்குச் செல்லும் இளம் முஸ்லிம் மக்கள் அங்கு தீவிர மதபோதனைகளை பயின்று வந்து அதனை இங்கு போதிப்பதாக உள்ளூர் தகவல்கள் தெரிவித்துள்ளதாக லக்பிம தெரிவித்துள்ளது. (எ–5)

## வீட்டில் தனியே இருந்த பெண்ணைத் தாக்கி நகை கொள்ளை

(யாழ்ப்பாணம்)

தனியே வீட்டில் இருந்த பெண்ணை தாக்கிவிட்டு திருடர்கள் வீட்டிலிருந்து நகைகளைத் திருடிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் சுழிபுரம் பாணாவெட்டி என்ற இடத்தில் இடம்பெற்றுள்ளது.

இதில் அதே இடத்தைச் சேர்ந்த லீலாவதி அம்பலவாணர் (வயது 44) என்பவர் காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை 9 மணியளவில் அவர் வீட்டிலிருந்த சமயம் வீட்டினுள் நுழைந்த திருடர்களால் அவர் தாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது

தாக்கப்பட்டு தலையில் படுகாயமடைந்த அவர் உடனடியாக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். (ச–3,4)

## மாகாண சபை உறுப்பினர்களுக்கு கிழக்கில் விசேட பாதுகாப்பு

(கொழும்பு)

கிழக்கு மாகாண சபைக்கு புதிதாக தெரிவு செய்யப்பட்டுள்ள உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களுக்கு விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மாகாண ஆளுநர் மொஹான் விஜேவிக்ரம தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை இது தொடர்பான விசேட கூட்டமொன்று ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றுள்ளது. முப்படை அதிகாரிகள் மற்றும் பொலிஸார் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஜெயந்தன் படையணியைச் சேர்ந்த உறுப்பினர்கள் கிழக்கை ஊடறுத்துள்ளதாக புலனாய்வுத் தகவல்கள் மூலம் தெரியவந்துள்ளது.

கிழக்கு மாகாண சபை அமைச்சர்களின் உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களுக்கு விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ரிவிர பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (ச–5)

## சிங்களம் கற்றுக் கொள்வதே அடுத்த பிரதான இலக்கு -பிள்ளையான்

(கொழும்பு)

சிங்கள மொழியை சரளமாக கற்றுக் கொள்வதே தமது அடுத்த பிரதான இலக்கு என கிழக்கு மாகாண முதலமைச்சர் பிள்ளையான் தெரிவித்துள்ளார்.

சிங்கள மொழியை சரளமாக பேச முடியாத காரணத்தினால் தொடர்பாடல்களை மேற்கொள்வதில் சிக்கல் ஏற்படுவதாகவும் சிங்கள மொழியைக் கற்றுக் கொள்ள அதிக ஆர்வம் காட்டுவதாகவும் லக்பிம ஞாயிறு இதழுக்கு பிள்ளையான் தெரிவித்துள்ளார்.

சிங்கள மொழியை கற்பதன் மூலம் இனங்களுக்கிடையிலான சகோதரத்துவத்தை மேலும் வலுப்படுத்த முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

இதனால் சிங்கள மக்கள் தமிழ் மொழியையும், தமிழர்கள் சிங்கள மொழியையும் கற்றுக்கொள்ளுமாறு தாம் வேண்டுகோள் விடுப்பதாகவும் பிள்ளையான் குறிப்பிட்டுள்ளார். (எ–5)

## மட்டக்களப்பில் ஹர்த்தால்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் காத்தான்குடி மற்றும் ஏறாவூர் பகுதிகளில் நேற்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

கடந்த வியாழக்கிழமை மட்டக்களப்புக்குச் சென்று திரும்பும் வழியில் கடத்தப்பட்டதாகக் கூறப்படும் இரண்டு முஸ்லிம்களையும் விடுவிக்குமாறு கோரியே இக் ஹர்த்தால் மேற்கொள்ளப்பட்டது.

கடத்தப்பட்ட இருவரும் ஏறாவூர் பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்பதனால் அப்பகுதிகளில் தொடர்ந்தும் பதற்ற நிலை காணப்படுவதாகப் பிரதேசத் தகவல்கள் தெரிவித்தன.

அப்பகுதியில் இராணுவத்தினரும் விசேட அதிரடிப்படையினரும் குவிக்கப்பட்டுள்ளனர். இதேவேளையில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டுக்கொண்டிருந்த வேளையில் அப்பகுதியில் சென்ற வாகனங்கள் கல் வீச்சுக்கு இலக்காகியுள்ளன.

இது இவ்வாறு இருக்க மட்டக்களப்பு ஐயன்கேணிப் பகுதியில் உள்ள மரம் அரியும் ஆலை ஒன்றிலிருந்து இரண்டு முஸ்லிம் இளைஞர்கள் ஆயுத முனையில் கடத்தப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டிருப்பதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச–5)

## ஜே.வி.பியின் தேசிய மாநாட்டை விமல் வீரவன்ச புறக்கணிப்பு

(கொழும்பு)

ஜே.வி.பியின் 5–வது தேசிய மாநாட்டில் கலந்து கொள்ளப்போவதில்லை என ஜே.வி.பியில் இருந்து பிரிந்து சென்று விமல் வீரவன்ச தலைமையில் உருவாகியிருக்கும் தேசிய சுதந்திர முன்னணி அறிவித்துள்ளது.

விமல் வீரவன்ச மற்றும் ஏனைய 9 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சியில் இருந்து உத்தியோக பூர்வமாக விலக்கப்படுவார்கள் என ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸநாயக்க தெரிவித்தார்.

நாளை நடைபெறவிருக்கும் தேசிய மாநாட்டுக்கு வருமாறு விமல் வீரவன்ச தலைமையிலானநாடாளுமன்றஉறுப்பினர்களுக்கு தனிப்பட்ட ரீதியில் கடிதங்கள் மூலமும், பத்திரிகைகள் மூலமும் அழைப்பிதழ்கள் அனுப்பியிருப்பதாக அவர் கூறியுள்ளார்.

கட்சியின் தேசிய மாநாடு நடத்தப்படுமாயின் கட்சி உறுப்பினர் வகித்த பதவிகள் இல்லாமல் செய்யப்படும்.

மத்திய குழுவுக்குப் புதியவர்களை நியமிப்பதற்கு இது ஒரு சந்தர்ப்பமாக கருதப்படும். தலைமைப்பதவியை மாற்றுவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என அநுரகுமார திஸநாயக்க தெரிவித்துள்ளார். கட்சியின் தலைவர் சோமவன்ச அமரசிங்கவுக்குப் பதிலாக ரில்வின் சில்வா புதிய தலைவராக நியமிக்கப்படுவதற்கான சாத்தியக் கூறுகள் காணப்படுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

எனினும் அவ்வாறானதொரு தீர்மானம் எதுவும் இதுவரை எடுக்கப்படவில்லை என அநுரகுமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

கட்சியின் புதிய திட்டங்கள் மற்றும் ஜே.வி.பியின் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு பிரச்சார நடவடிக்கைகள் குறித்து நாளை நடைபெறும் தேசிய மாநாட்டில் அறிவிக்கப்படும் என ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் கூறியுள்ளார்.

ஒவ்வொரு 5வருடங்களுக்கும் ஒருமுறை ஜே.வி.பியின் தேசிய மாநாடு நடைபெறுகிறது. ஜே.வி.பி இரண்டாக உடைந்த பின்னர் நாளை முதல்முறையாக தேசிய மாநாடு நடைபெறுகிறது. (ச–5)

## வன்முறைச் சம்பவங்களுக்கு முஸ்லிம் காங்கிரஸ் குற்றச்சாட்டு

மட்டக்களப்பு காத்தான்குடியில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற வன்முறைகளுக்கு பிள்ளையான் குழுவே காரணம் என்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் குற்றஞ்சாட்டியுள்ளது. அக்கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் நிசாம் காரியப்பர் இது தொடர்பில் கூறியுள்ளதாவது,

பிள்ளையான் குழுவின் இரண்டு உறுப்பினர்கள் கொல்லப்பட்ட நிலையில் கடந்த வியாழக்கிழமை காத்தான்குடியில் வன்முறைகள் ஏற்பட்டமைக்கு அவர்களே காரணமானவர்கள்.

பிள்ளையான் குழுவின் ஆயுதங்களை மகிந்த அரசாங்கம் உடனே களைய வேண்டும். இல்லையெனில் காத்தான்குடி நிலைமையானது அப்பிரதேசத்தின் இதர பகுதிகளுக்கும் விரிவடையும். சட்டம் ஒழுங்கை காப்பாற்றுவதில் பொலிஸார் தமது கடமையை மேற்கொள்ள வேண்டும்.

அங்கு நிலைமைகளை முஸ்லிம் காங்கிரஸ் அவதானித்து வருகிறது.

காத்தான்குடியில் இயல்பு நிலைமை விரைவில் திரும்பும் என நம்பிக்கை கொண்டுள்ளோம். வன்முறைகளை இதர பகுதிகளுக்கு கொண்டு செல்ல வேண்டாம் என்று நான் கேட்டுக் கொள்கின்றோம் என்றார் அவர். (ச–5)

## பிரதேச சபைத் தலைவர் மீது தாக்குதல்

அம்பாறை மாவட்ட அட்டாளைச்சேனை பிரதேச சபையின் தலைவர் மசூர் சின்னலெப்பை நேற்று முன்தினம் இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டுள்ளார். அவர் வீட்டிலிருந்த போது இனந்தெரியாத குழுவொன்று அவரைத் தாக்கியதாகத் தெரிவிக்கப்பட்டது. படுகாயமடைந்த நிலையில் அவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ச–5)


**ஆனந்தி திருமண சேவை**

**மணமகன் தேவை**

குடும்பநல உத்தியோகத்தராக பணியாற்றும் 1966ல் பிறந்த அவிட்டம் 4–ம் பாதம், 8–ல் செவ்வாய், கிரகபாவம் 59, வேளாள சமூகப் பெண்மணிக்கு ஏற்ற மணமகன் வேண்டுகின்றோம். நேரடியாக, அஞ்சல் வழி, 0212228708 தொலைபேசி மூலமும் தொடர்பு கொள்க.

**V.A.சிவராஜா (சோதிடர்)**
**ஆனந்தி திருமண சேவை**
56,அம்மன் வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(1304)




முறிகண்டியில் இடம்பெற்ற கிளைமோர்த் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் இறுதிக் கிரியைகள் நேற்று முன்தினம் இடம்பெற்றது. அந்நிகழ்வில் கலந்து கொண்ட பொதுமக்களை படத்தில் காணலாம்.

# இன்று ஒரு தகவல்

## துயர மூட்டைகள்

இந்த உலகத்திலேயே தான் மட்டும்தான் மிகவும் கஷ்டப்படுவதாகவும், மற்றவர்களெல்லாம் சந்தோஷமாக இருக்கிறார்கள் என்றும் ஒருவன் எண்ணினான். அவன் ஒருநாள் கடவுளை வேண்டிக்கொண்டான்.

``சுவாமி! இந்த உலகத்தில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவிதமான கஷ்டம் இருக்கிறதென்பதை ஒத்துக்கொள்கிறேன். ஆனால் எனக்கு அது கொஞ்சம் அதிகமாகவே இருக்கிறது. அதனால் எனக்கு நீங்கள் ஒரு உதவிசெய்ய வேண்டும். என்னிடம் இருக்கிற துயரங்களை இன்னொருவரிடம் கொடுத்துவிட்டு அவருக்கு இருக்கும் துயரங்களை மாற்றி என்னிடம் கொடுத்துவிடுங்கள்'' என்று வேண்டிக்கொண்டான்.

அன்றிரவே அவன் ஒரு கனவு கண்டான். வானத்திலிருந்து ஒரு அசரீரி கேட்டது. ``எல்லோரும் அவர்களுடைய கஷ்டங்களையெல்லாம் ஒரு பையில் போட்டுக் கொள்ளுங்கள்! அதை எடுத்துக்கொண்டு ஊர் எல்லையில் உள்ள கோயிலுக்கு வந்து சேருங்கள்'' என்றது அந்தக் குரல்.

கடவுள் நம் பிரார்த்தனைக்கு செவிசாய்த்துவிட்டார் என்று சந்தோஷப்பட்டான் இவன். உடனே தனது கஷ்டங்களையெல்லாம் ஒரு சாக்குப்பையில் கட்டிக்கொண்டு வெளியில் இறங்கி நடந்தான். அங்கு இவனுக்கு முன்னாலேயே நிறையப்பேர் ஆளுக்கொரு பையை தூக்கிக் கொண்டு கோயிலுக்குப் போய்க்கொண்டிருந்தார்கள். சிலபேர் மூட்டையாக கட்டி தலையில் சுமந்து கொண்டு போய்க்கொண்டிருந்தார்கள்.

இவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. ஏனென்றால், எல்லோருடைய பையும் இவன் பையைவிட பெரிதாக இருந்தது. இவன் மறுபடியும் கடவுளை வேண்டினான். ``கடவுளே! இப்பொழுது இருக்கின்ற சூழ்நிலையைப் பார்த்தால் என்னுடைய பையே பரவாயில்லை. அதனால் ஒன்றையும் மாற்ற வேண்டாம். இந்தப் பையோட திரும்பி வீட்டுக்குப் போனால் போதும்!'' என்று நினைத்தான்.

எல்லோரும் கோயிலுக்குப் போய்ச் சேர்ந்தனர். கோயிலில் மறுபடியும் அந்தக்குரல் கேட்டது.

``எல்லோரும் அவரவர் பைகளை சுவரிலே தொங்கவிடுங்கள். திடீரென விளக்குகள் அணையும்! பின்னர் மணி அடிக்கப்படும். அந்த சமயத்தில் உங்களுக்கு வேண்டிய பையை நீங்கள் தேர்ந்தெடுக்கலாம். வெளிச்சம் இருக்கும் பொழுதே உங்களுக்குப் பிடித்த பைக்குப் பக்கத்தில் போய் நிற்கலாம்'' என்றது அந்தக்குரல்.

திடீரென விளக்குகள் அணைந்து மணி கேட்டது. ஒவ்வொருவரும் தங்களது பைகளையே கெட்டியாகப் பிடித்துக்கொண்டு நின்றார்கள். இவனும் அப்படியே நின்றான். மெதுவாக பக்கத்தில் இருப்பவனிடம் ``ஏன் நீங்கள் பையைக் கையிலேயே வைத்திருக்கிறீர்கள்? சுவரில் மாட்டவில்லையா?'' என்று கேட்டான்.

``இல்லை! நீ எதற்காக அதைக் கையில் வைத்திருக்கிறாயோ, அதே காரணமாகத்தான் நாங்களும் வைத்திருக்கிறோம். நம்முடைய கவலைகளைப் பற்றி நமக்கு ஓரளவு தெரியும். ஆனால், மற்றவர்களின் கவலைகள் நமக்கு பரீட்சயம் இல்லாதது சமாளிப்பது சுலபம்.

தெரியாததை சமாளிக்க வேண்டுமானால் ஆரம்பத்திலிருந்து தொடங்க வேண்டும். அதனால் பழைய நண்பர்களுடன் வாழ்வது மேல்'' என்றானாம். இது ஓஷோ என்ற பெரியவர் கூறிய கதை. நமது கஷ்டங்கள் தான் பெரியது. அதை இன்னொருவரிடம் கொடுத்து மாற்றிக்கொள்ளலாம் என்று நினைப்பது தவறு. இதே மாதிரி இன்னொரு சம்பவம்.

ஒரு ஊரில் ஒருநாள் இரவு நேரத்தில் ஆகாயத்திலிருந்து ஒரு குரல் கேட்டது. ``எல்லோரும் அவரவர் கவலைகளை மூட்டைகட்டிக்கொண்டு கோயிலுக்கு வாருங்கள்!'' என்றார் கடவுள். உடனே வரிசையாக எல்லோரும் வர ஆரம்பித்தனர். எல்லோரது கையிலும் ஒரு பை இருந்தது. கவலையே இல்லாத ஆள் யார் என்று தேடினார் கடவுள். ஒரே ஒரு ஆள் மட்டும் கையை வீசிக்கொண்டு நடந்து வந்தான். கடவுள் அவனிடம் போனார்.

``உனக்கு கவலையே இல்லையா?'' என்று கேட்டார்.

``எனக்கும் சில கவலையெல்லாம் உண்டு!'' என்றான் இவன்.

``எங்கே அதெல்லாம்?'' என்று கேட்டார் கடவுள்.


``பின்னாடி ஒரு லொறியில் வந்துகொண்டிருக்கிறது!'' என்றான் அவன்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவை கலைக்குமாறு வீரவன்ச கோரிக்கை

(கொழும்பு)

மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட



உடலாகம தலைமையிலான விசாரணை ஆணைக்குழுவைக் கலைக்க வேண்டுமென தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாட்டின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் செயற்படும் சக்திகளுடன் இணைந்து அந்த ஆணைக்குழு இயங்கிவருவதாக விமல் வீரவன்ச வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய அமெரிக்கா, கனடா, ஐரோப்பிய ஒன்றியம் போன்வற்றிடமிருந்து ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு நிதியுதவிகளைப் பெற்றுக்கொள்ளப்போவதாக அறிவித்துள்ளமையானது குறித்து நாங்கள் கவலையடைகின்றோம். அவ்வாறு அந்த நாடுகளின் உதவிகளைப் பெற்றுக்கொண்டால் அவர்களின் தேவைகளை நிறைவேற்ற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது என அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான நாடுகளின் தேவைகளை நிறைவேற்ற விசாரணை ஆணைக்குழு முன்வந்தால் அது வெட்கக்கேடானது என விமல் வீரவன்ச கூறியுள்ளார். அந்த நாடுகளுக்கு சாதகமாகவே விசாரணை ஆணைக்குழு இடைக்கால அறிக்கையை முன்வைத்திருக்கலாமென்ற சந்தேகம் தோன்றியிருப்பதாக விமல் வீரவன்ச குற்றஞ்சாட்டியுள்ளார்.

பாராளுமன்றத்தின் அனுமதியுடன் விசாரணை ஆணைக்குழுவுக்கு ஜனாதிபதி நிதியுதவி வழங்கியிருந்தார். எனினும் ஆணைக்குழுவின் தலைவர் வெளிநாட்டு தூதரகங்களிடமிருந்து பணத்தைக் கோரியுள்ளார் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச மேலும் தெரிவித்துள்ளார். (அ-5)

# வெளிநாட்டு உதவிகள் பெற்றுக்கொள்ளப்படவில்லை

## விசாரணைகள் ஆணைக்குழு தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் கனடா ஆகிய நாடுகளின் நிதி உதவிகளை ஏற்றுக் கொண்டமையால் மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணை ஆணைக்குழுவைக் கலைக்க வேண்டும் என விமல்வீரவன்ச விடுத்த வேண்டுகோளை விசாரணை ஆணைக் குழுவின் தலைவர் முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதி நிஸாங்க உடலகம நிராகரித்துள்ளார்.

சிலகட்சிகள் கூறுவதைப் போல சர்வதேச நாடுகளிடமிருந்து ஆணைக்குழு எந்தவிதமான நிதி உதவிகளையும் பெற்றுக்கொள்ளவில்லை என உடலகம கொழும்பு ஊடகம் ஒன்றிடம் தெரிவித்தார். விசாரணை ஆணைக்குழுவைக் கலைக்குமாறு சிலகட்சிகள் கோரியிருப்பது பற்றியும் அதற்கான விளக்கங்கள் பற்றியும் ஜனாதிபதி செயலகத்திற்கு அறிவித்திருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

சர்வதேச சுயாதீன மாண்புமிக்கோர் குழுவினர் நாட்டை விட்டு வெளியேறியதைத் தொடர்ந்து விசாரணை ஆணைக்குழுவின் தொடர்ச்சியான செயற்பாடுகள் குறித்து இலங்கைக்கு வருகை தரும் அமெரிக்கா, கனடா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றின் தூதுவர்கள் கலந்துரையாடல்களை நடத்தியிருந்ததாக் உடலகம கூறினார்.

சர்வதேச சுயாதீன மாண்புமிக்கோர் குழுவினரின் வெளியேற்றத்தைத் தொடர்ந்து விசாரணைகளைத் தொடர்வது பற்றிக் கேள்வி எழுப்பப்பட்டது. மூன்று நாடுகளின் பிரதிநிதிகளும் எம்மைச் சந்தித்து விசாரணைகளைத் தொடர்வது பற்றிக் கேட்டறிந்து கொண்டனர். எனினும் சர்வதேச சுயாதீன மாண்புமிக்கோர் குழுவின் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்தி, தொடர்ந்து விசாரணைகளை முன்னெடுப்பதற்கு தீர்மானித்தோம். கலந்துரையாடல்களை நடத்துவதற்கு அன்றைய தினம் வந்த தூதுவர்களுக்கு தகவல் பரிமாறப் படவில்லை என முன்னாள் நீதிபதி குறிப்பிட்டார்.

விசாரணைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என்பதுடன் நேரடித் தொலைக்காட்சி மூலமான காட்சிகள் பதிவு செய்யப்படும் என்பதை வெளிநாட்டு தூதுவர்களுக்கு விளக்கப்படுத்தியிருப்பதாக விசாரணை ஆணைக் குழுவின் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-5)

## இராசிபலன்

26.05.2008

(வைகாசி 13, திங்கட்கிழமை)

திருவோணம் பிற்பகல் 03.45மணிவரை

ஷஷ்டி பிற்பகல் 04.06 மணிவரை

இராகுகாலம் 07.22-08.52 மணிவரை

சுபநேரம்-11.52-01.22 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | உறவினர் சந்திப்பு, போசன சுகம், மேன்மை. |
| இடபம் | பிதாசிந்தை, சரீரப்பிரயாசை, காரியதாமதம், பித்தரோகம். |
| மிதுனம் | அபகீர்த்தி, ஆரோக்கியக் குறைவு, முயற்சி தாமதம், வாகனபயம். |
| கடகம் | எடுத்த கருமங்கள் கைகூடும், செல்வாக்கு, பொருள் சேர்க்கை. |
| சிங்கம் | நல்ல காரியம், அதிகாரம், தேக நலன், பகைவரால் நன்மை. |
| கன்னி | வியாபார விருத்தி, புத்திரரால் கவலை, எடுத்த காரியம் தாமதமாகும். |
| துலாம் | புதிய உறவு, வீண்பயம், சுப நிகழ்வு, முயற்சி தாமதம். |
| விருச்சிகம் | சகோதரர் உதவி, முயற்சி கைகூடும், போசனசுகம், பிரயாணம். |
| தனுசு | கோபப்படல், நல்ல முயற்சி, சுப செலவு, ஆரோக்கியக்குறைவு. |
| மகரம் | தெளிந்த சிந்தை, நல்ல முயற்சி, பெரியோர் உதவி. |
| கும்பம் | பிரயாண பயம், நிலைமாற்றம், வேலைச்சுமை, முயற்சி தாமதம். |
| மீனம் | பெரியோர் உதவி, தடைப்பட்ட காரியம் கைகூடும், அதிகாரம். |

வளவன்

# கருத்து சுதந்திர உரிமையை அரசாங்கம் பாதுகாக்க வேண்டும்

## ஜே.வி.பி.

(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு அங்கத்துவம் மறுக்கப்பட்டமைக்கும் அரசாங்கத்தின் செயற்பாடுகள் முக்கிய ஏதுவாக அமைந்துள்ளதென ஜே.வி.பி. சுட்டிக்காட்டியுள்ளது. கருத்துச் சுதந்திரத்தை பாதுகாப்பது தொடர்பில் அரசாங்கம் பொறுப்புணர்ச்சியுடன் செயலாற்ற வேண்டும் என ஜே.வி.பி. கோரிக்கை விடுத்துள்ளது.

ஊடகவியலாளர்களின் மீது இழிவான தாக்குதல்களை மேற்கொள்வோருக்கு எதிராக கடுமையான சட்டநடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என தெரிவித்துள்ளது. தினேசன் பத்திரிகையின் பிரதி ஆசிரியர் கீத் நொயர் மீது மேற்கொள்ளப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குதலை கண்டிக்கும் வகையில் ஜே.வி.பி. இந்த கண்டன அறிக்கையை வெளியிட்டுள்ளது.

அரசாங்கத்திற்கு எதிராக கருத்துக்களை வெளியிடும் ஊடகவியலாளர்களின் மீது அரச அதிகாரத்தைப் பயன்படுத்தி அழுத்தங் கொடுக்கப் படக்கூடாதென தெரிவித்துள்ளது. அரசாங்கத்தின் பொறுப்பற்ற செயற்பாடுகளினால் சர்வதேச சமூகத்தில் இலங்கைக்கு அபகீர்த்தி ஏற்பட்டுள்ள தாக ஜே.வி.பி. சுட்டிக்காட்டியுள்ளது. (ந-5)



இடைக்காடு மகாவித்தியாலய உயர்தர மாணவர்களின் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வில் மாணவ முதல்வன் சி.கார்த்தீபன் தலைமையில் அதிபர் அ.அருந்தவநேசன், சிறப்பு விருந்தினர் டாக்டர் வி.செல்வவேல், அச்சுவேலி பிரதேச சபை செயலாளர் த.நடராசா, முன்னாள் அதிபர் பி.பூபாலசிங்கம் ஆகியோர் அழைத்துவரப்படுவதைப் படத்தில் காணலாம்.

# குடாநாட்டில் அபிவிருத்தி பணிகள் குறித்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் இயல்பு நிலை தோன்றி மாகாண சபைத்தேர்தல் நடத்தும் வரையில் வடமாகாணத் தின் மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, அபிவிருத்தி நடவடிக்கைகள் உட்பட மக்கள் நலன் சார்ந்த மேம்பாட்டுப் பணிகளையும்மனிதாபிமானப்பணி களையும் மேற்கொள்ளும் முகமாக ஜனாதிபதியால் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் விசேட செயற்பாட்டுக்குழு அமைக் கப்பட்டதன் பின்னர் யாழ்ப் பாணத்திற்கு வருகை தந்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குடாநாட்டில் மேற்கொள்ளப்பட வேண் டிய துரித மற்றும் பாரிய அபிவிருத் தித்திட்டங்கள் குறித்து தற்போது ஆராய்ந்து வருவதாக அமைச்சின் செய்தி அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட் டுள்ளதாவது,

கிளிநொச்சி மற்றும் முல்லைத் தீவு மாவட்டங்களில் ஏற்கனவே இனங் காணப் பட்டுள்ள மனிதாபிமான பணிகளை முன் னெடுப்பதற்கான நடவடக்கை கள் மேற் கொள்ளப்படுகின்றன. அதே சமயம் யாழ். குடாநாட்டில் ஏற்கனவே இனங் காணப் பட்டுள்ள மக்கள் நலன் சார்ந்த மேம்பாட்டுப் பணிகளுடன் மேலும் பல்வேறு குறுகிய மற் றும் நீண்ட காலத்தைக் கொண்ட அபி விருத்திப்பணிகள் குறித்து அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தா பல்வேறு மட்ட அதிகாரி களுடன் கலந்துரை யாடி ஆராய்ந்து வருகின் றார்.

இதே சமயம் இன்று முதல் அமைச்சர் டக்ளஸ் தேவானந் தாவை யாழ். அமைச்சு அலுவலகத்தில் பொதுமக்கள் சந்திப்பதற் கான ஏற் பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள் ளன.

பொது மக்கள் தங்களது பல் வேறு பிரச்சினைகள் குறித்து அமைச்சரை நேரில் சந்தித்து அவற் றிற்கான தீர்வுகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

அத்துடன் 021-2229824 எனும் தொலைபேசி இலக்கத்தில் அமைச்சருடன் நேரடி யாகவும் தொடர்பு கொண்டு பொது மக்கள் தங்களது குறைபாடுகளைத் தீர்த்துக் கொள்ளவும் இயலும் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (அ-5)

# கிராம அலுவலர் பற்றாக்குறையால் கடமைகளை நிறைவேற்றுவதில் சிரமம்


## அரச அதிபரிடம் பிரதேச செயலாளர்கள் முறையீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களில் கிராம அலுவலர் வெற்றிடங்கள் நிரப்பப் படாததால் அலுவலக கடமைகளை மேற் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக் குகின்றோம் என்று பிரதேச செயலாளர்கள் கூட்டாக யாழ். அரசாங்க அதிபர் க.கணே ஷிடம் முறையிட்டுள்ளனர்.

கடந்த 5 வருடங்களுக்கு மேலாக கிராம அலுவலக பதவி வெற்றிடங்கள் நிலவி வருகின்றன. ஆனால் இதுவரையில் வெற் றிடங்கள் நிரப்பப்படவில்லை. இதேவேளை யாழ்.மாவட்டத்தில் 440 கிராம அலுவலர்கள் கடமையாற்ற வேண்டிய இடத்தில் 267 கிராம அலுவலர்களே கடமையாற்றுகின்றனர்.

கடந்த ஆண்டு பரீட்சை மூலம் ஆட்சேர்ப்பு இடம்பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப் பட்ட போதும் அத் திட்டம் அரசியல் மாறுபாடு களால் நிறைவேறாத சூழ்நிலை காணப்படு கின்றது. (அ-5)



வலிகாம வலய மாவட்ட உடற்பயிற்சிப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்ற நவாலி மகாவித்தியாலய மாணவிகளையும் அதிபர் இரா.வசந்தகுமார், உபஅதிபர், பொறுப்பாசிரியர்கள், குழுத்தலைவர் ஆகியோரையும் படத்தில் காணலாம்.

# மஹா கும்பாபிஷேகம்

(பருத்தித்துறை)

சரித்திர பிரசித்திபெற்ற அருள்மிகு வல்லி புர குருக்கட்டு சித்திவிநாயகர் ஆலய மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 6ஆம்திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 6.38மணிமுதல் 8.38மணி வரையான வேளையில் மஹாகும்பாபி ஷேகம் நடைபெற்று தொடர்ந்து அபிஷேகம் நடைபெறும்.

பிற்பகல் 3மணிக்கு எம்பெருமான் வீதியு லா வருவார். (அ-52)

# வளர்ப்பு நாய்களுக்கான கருத்தடை தடுப்பூசி ஏற்றல்

யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கான மலடாக்கல் சத்திர சிகிச்சையும், கருத்தடை ஊசி ஏற்றலும் 29 ஆம் திகதி வியாழக்கிழமை கொழும்புத் துறை, சுவாமியார் வீதி சிகிச்சை நிலையத் தில் நடைபெறவுள்ளதாக யாழ். மாநகரசபை யின் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் அறிவித்துள்ளார்.

இதில் ஆண் வளர்ப்பு நாய்களுக்கான கருத்தடை சிகிச்சையும், 8 மாதத்திற்கு மேற் பட்ட பெண் வளர்ப்பு நாய்களுக்கான கருத் தடை ஊசி ஏற்றலும் நடைபெறவுள்ளது. பொதுமக்கள் தங்களது வளர்ப்பு நாய்களை அழைத்து வந்து பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். (அ-7)

# மாணவர் சத்துணவு விநியோகத்திட்டம்

## தொடர்பான கலந்துரையாடல்

வலி.கிழக்கு பிரதேச சபையின் கீழுள்ள முன்பள்ளி ஆசிரியர்களுக்கான "மாணவர் சத்துணவு விநியோகத்திட்டம்" தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் 28 ஆம் திகதி புதன்கிழமை, பிற்பகல் 1.30 மணிக்கு வலி. கிழக்கு பிரதேச சபை தலைமையலுவலகத்தில் சபைச் செயலாளர் தலைமையில் நடைபெற வுள்ளது.

இந்நிகழ்வில் முன்பள்ளி ஆசிரியர்க ளுக்கு மேற்படி திட்டம் தொடர்பானதும், ஆசிரியர்களை திட்டத்தில் இணைப்பது தொடர் பானதுமான விளக்கங்களை போஷாக்கு நிறுவனப் பிரதிநிதிகள் வருகைதந்து கலந்துரையாட விருப்பதினால் வலி.கிழக்கு பிரதேச சபைக் குட்பட்ட அனைத்து முன்பள்ளி ஆசிரியர்க ளையும் தவறாது குறித்த நேரத்திற்கு வருகை தருமாறு வலி.கிழக்கு பிரதேச சபையின் செயலாளர் கேட்டுக்கொள்கிறார். (அ)

# ஒன்றுகூடல்

நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலய உயர்தர மாணவர் மன்றத்தின் ஒன்றுகூடலும் மதியபோசன விருந்தும் 28 ஆம் திகதி புதன் கிழமை 12 மணிக்கு ப.ரகுமாறன் தலைமை யில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வைத்திய அதிகாரி செல்வி பா.தாமரைச்செல் வியும் சிறப்பு விருந்தினராக றோ.க.மகளிர் கல்லூரி அதிபர் அருட்சகோதரி அ.யசிந்தா ராணியும் கலந்துகொள்ளவுள்ளனர்.

ஆசியுரையை பிரம்மஸ்ரீ கா.புவனேந்திர சர்மா, வணபிதா றோய் பேடினன், வணபோ தகர் ஆர்.யோண்செல்வம் ஆகியோரும் வாழ்த் துரைகளை பொறுப்பாசிரியர் இ.ஜெனிதா, ஆசிரியர் திருமதி வி. பத்மநாதன், அதிபர் ச.சத்தியவரதன் ஆகியோரும் வழங்கவுள்ள னர். (அ-6)

# யோகாசன வகுப்புக்கள்

சிவலிங்க யோககேந்திரா நிலையத்தி னால் நடாத்தப்படும் புதிய யோகாசன வகுப் புகள் வட்டுக்கோட்டை சிந்துபுரம் காந்திஜி சனசமூக நிலையத்தில் எதிர்வரும் 1 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு சிவலிங்க யோககேந்திரா நிலைய செயலாளர் சி.சோதிமூர்த்தி தலைமையில் ஆரம்பமாக வுள்ளது.

கலந்துகொள்ளவிரும்புவோர் வட்டுக்கோட் டை சிந்துபுரம் காந்திஜி சனசமூக நிலையத் தில் பதிவுகளை மேற்கொள்ளும்படியும், பூரண மாகப் பயிற்சியைப் பூர்த்தி செய்வோருக்கு சான்றிதழ் வழங்கப்படுமென்றும் நிலைய இயக்குநர் க.நிஜலிங்கம் தெரிவித்துள் ளார். (அ-7)

♦♦♦♦

யாழ்ப்பாணம், சிவலிங்க யோககேந்திரா நிலையத்தினரால் கட்டைப்பிராய் ஸ்ரீ முத்து மாரி அம்மன் தேவஸ்தான திருமணமண் டபத்தில் யோகாசனப் பயிற்சி வகுப்புக்கள் சி.சோதிமூர்த்தி தலைமையில் நடைபெற்று வருகின்றன.

கலந்துகொள்ள விரும்புவோர் கட்டப் பிராய் ஸ்ரீமுத்துமாரி அம்மன் தேவஸ்தான திருமண மண்டபத்தில் தொடர்புகொள்ளு மாறு நிலையத்தின் இயக்குநர் க.நிஜலிங்கம் அறிவித்துள்ளார். (ந-7)




# யாழ்.செய்திகள்

# விண்ணப்பம் கோரல்

(அச்சுவேலி)

யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்றம், 'நாடகப் பயிற்சி'' பாட நெறிக்கு விண்ணப் பங்களைக் கோரியுள்ளது. ஆண்-பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். நாடகக் கலையில் ஆர்வம் உள்ளவர்களும், அரங்கு தொடர்பான பயிற்சியை பெற விரும்புபவர் களும், நாடகமும் அரங்கியலும் பாடத் துறை யை கற்கும் மாணவர்களும் நாடகப் பயிற் சிக்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்கள் யாழ். திருமறைக் கலா மன்ற அலுவலகத்தில் விண்ணப்பங்களைப் பெற்று 2008.06.05ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பிரதி இயக்குநர், திருமறைக் கலாமன்றம், 238, பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)







யாழ்.பிரதேச செயலகத்தின் யாழ்.நகர் மேற்கு வலயத்தில் சமுர்த்தி சித்திரை புதுவருட விழாக் கொண்டாடப்பட்டபோது ஜே-85 பிரிவின் கிராமஅலுவலர் சுந்தரராஜன், கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் சிறிபாலகிருஷ்ணன் ஆகியோர் உரையாற்றுவதையும், இந்நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

# பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் ஆறுதல்; கில்கிறிஸ்ட் அணிக்கு பரிதாப நிலை

(ஐதராபாத்)

அகில்,வைற்றின் அதிரடியில் பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணி 5 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

தோல்வி அடைந்த டெக்கான் சார்ஜர்ஸ் அணி ஐ.பி.எல் தொடரில் 10-வது தோல்வியைச் சந்தித்து 8-வதும் இறுதியுமான அணியாக பரிதாப நிலைக்கு தள்ளப்பட்டது.

ஐ.பி.எல் தொடரில் நேற்று மாலை ஐதராபத்தில் நடைபெற லீக் சுற்றின் 51-வது போட்டியில் ராவிட் தலைமையிலா பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணியும் கில்கிறிஸ்ட் தலைமையிலான டெக்கான் சார்ஜர்ஸ் அணியும் மோதின.

இரு அணிகளும் அரையிறுதி வாய்ப்பை இழந்த நிலையில் பெரிதும் எதிர்பார்க்கப்படாத ஆட்டமாக நடைபெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று,

முதலில் துடுப்பெடுத்தாடிய டெக்கான் சார்ஜர்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட இருபது ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதில் கிப்ஸ் 34 பந்துகளில் (6பவுண்டரிகள், 2சிக்ஸர்கள் உட்பட) 47 ஓட்டங்களையும் கில்கிறிஸ்ட் 37 பந்துகளில் (4 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் உட்பட) 46 ஓட்டங்களையும் வேணுகோபால் ராவ் 26 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் வினேகுமார் 3 விக்கெட்டுக்களையும் ஸ்ரையன், ஹோலி ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 166 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய பெங்களூர் நோயல் சலஞ்ஜர்ஸ் அணி 19 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 171 ஓட்டங்களை எடுத்து 5 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

இதில் மிஸ்பா உல்ஹக் 28 பந்துகளில் (4 பவுண்டரிகள் ஒரு சிக்ஸர் உட்பட) 34 ஓட்டங்களையும் கலிஸ், ராவிட் ஆகியோர் தலா 31 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்ததுடன், வைட் 23 பந்துகளில் (ஒருபவுண்டரி ; 2 சிக்ஸர் உட்பட) 31 ஓட்டங்களையும் அகில் 7 பந்துகளில் (2 பவுண்டரிகள் 3 சிக்ஸர்கள் உட்பட) 27 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

ஆட்ட நாயகனாக வினேகுமார் தெரிவானார்.

இவ் வெற்றியின் மூலம் ராவிட் தலைமையிலான பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணி தான் ஆடிய 13-வது ஆட்டதில் பெறும் 4-வது வெற்றி இதுவாகும்.

இதேவேளை இத் தோல்வியுடன் கில்கிறிஸ் தலைமையிலான டெக்கான் சார்ஜர்ஸ் அணி தான் ஆடிய 13-வது ஆட்டத்தில் சந்திக்கும் 11-வது தோல்வி இதுவாகும்.

இதன்மூலம் ஐ.பி.எல் தொடரில் கூடிய தோல்விகளை சந்தித்த அணி என்ற நிலையில் புள்ளிகள் அடிப்படையில் 8-வதும் இறுதியுமான அணியாகவுள்ளது. (5)

## காயத்துடன் விளையாடி சதமடித்தார் சந்தர்போல்

(கிங்ஸ்டன்)

மேற்கிந்தியத் தீவுகள் -அவுஸ்திரேலிய அணிகள் மோதிய முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி கிங்ஸ்டனில் நடைபெற்று வருகிறது.

அவுஸ்திரேலியா முதல் ,இன்னிங்ஸில் 431 ஓட்டங்கள் குவித்தது. 2-வது நாள் ஆட்ட நேர முடிபில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 3 விக்கெட் இழப்புக்கு 115 ஓட்டங்களை எடுத்திருந்தது.

நேற்று முன்தினம் 3-வது நாள்ஆட்டம் நடந்தது. பிரட்லீயின் பந்தில் சந்தர்போலின் தலையில்காயம் ஏற்பட்டது. அப்போது அவர் 86 ஓட்டங்களை எடுத்திருந்தார். உடனடியாக வைத்தியசாலைக்கு அழைத்துச்செல்லப்பட்டார்.

அவரது தலையில் ஸ்கான் எடுத்து பார்க்கப்பட்டது. மூளையில் பாதிப்பு ஏதும் ஏற்படவில்லை அதன் பின்னர் தொடர்ந்து விளையாடிசதம் அடித்து 118 ஓட்டங்களை குவித்தார்.

மேற்கிந்தியத் தீவுகள் 312 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. நேற்று முன்தினம் 2ஆம்நாள் ஆட்டநேர முடிபில் அவுஸ்திரேலியா 2-வது இன்னிங்ஸில் 4 விக்கெட் இழப்புக்கு 17 ஓட்டங்களை எடுத்திருந்தது. (5)

## நியூசிலாந்து அணி முன்னிலையில்



(மன்செஸ்டர்)

டானியல் விக்டோரியின் சுழலில் இங்கிலாந்து அணி அதன் முதல் இன்னிங்ஸில் 202 ஓட்டங்களை மாத்திரமெடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

முதலாவது இன்னிங்ஸில் 179 ஓட்டங்களால் முன்னிலையில் உள்ள நிலையில் இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி வரும் இங்கிலாந்து அணி நேற்றைய மூன்றாம் நாள் ஆட்ட தேநீர் இடைவேளையின் போது 6 விக்கெட்டுக்களை இழந்து 99 ஓட்டங்களை மாத்திரம் எடுத்திருந்தது.

இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணி 3 டெஸ்ட் மற்றும் 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகின்றது.

இத் தொடரின் முதலாவது டெஸ்ட் சமநிலையில் முடிபுற்ற நிலையில்2-வது டெஸ்ட் கடந்த23ஆம் திகதி மன்செஸ்டரில் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி அதன் முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 381 ஓட்டங்களை எடுத்தது.

இதில் ஆட்டமிழக்காமல் ரெய்லர் 154 ஓட்டங்களையும் ஹவ் 64ஓட்டங்களையும் மற்றும் மில்ஸ் 57 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் அண்டர்சன் 4 விக்கெட்டுக்களையும் சயிட் பொத்தம் 2 விக்கெட்டுக்களையும் பனீசர் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.


பதிலுக்கு முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி டானியல் விக்டோரியின் துல்லியமான பந்துவீச்சால் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 202 ஓட்டங்களை மாத்திரம் எடுத்தது.

இதில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ஸ்ரோரஸ் 60 ஓட்டங்களையும் அணித்தலைவர் வோகன், பிரொட் ஆகியோர் தலா 30 ஓட்டங்களையும் பீற்றர்சன் 26 ஓட்டங்களையும் அதிகபட்சமாக எடுத்தனர்.

பந்துவீச்சில் அணித்தலைவர் டானியல் விக்டோரி 5 விக்கெட்டுக்களையும் ஓபிறின் 3, மில்ஸ் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

முதலாவது இன்னிங்ஸில் 179 ஓட்டங்கள் முன்னிலையில் தொடர்ந்து தனது 2-வது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிவரும் நியூசிலாந்து அணி நேற்றைய 3ஆம் நாள் ஆட்ட தேநீர் இடைவேளைக்காக ஆட்டம் நிறுத்தப்பட்டபோது 6விக்கெட்டுக்களை இழந்து 99 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இதில் ஹவ் 29 ஓட்டங்களையும் மார்ஷல் 28 ஓட்டங்களையும் எடுத்திருந்தனர். பந்து வீச்சில் பனீசர் 5 விக்கெட்டுக்களையும் அண்டர்சன் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். (5)



## இரு கால்களையும் இழந்த வீரர் ஜாம்பவான்களுடன் ஓட வருகிறார்

இரு கால்களிலும் முழங்காலுக்கு கீழ் பகுதியை இழந்த ஓட்டவீரர் ஒஸ்கார் பிஸ்டோரிஸ் பீஜிங் ஒலிம்பிக் போட்டிகளில் பங்குபற்றும் தகுதியை பெறுவதற்கு தீவிர முயற்சி செய்து வருகிறார்.

21 வயதான பிஸ்டோரியஸ் தென்னாபிரிக்காவைச் சேர்ந்தவர். உடற்குறைபாட்டுடன் பிறந்த அவரின் கால்களின் முழக்காலுக்கு கீழ்பட்ட பகுதிகள் 11 மாத வயதிலேயே அகற்றப்பட்டன. ஆனால் சோர்ந்துவிடாமல் செயற்கை கால்களுடன் பல்வேறு விளையாட் டுக்களில் பங்குபற்றியவர் பிஸ்டோரியஸ். 2003ஆம் ஆண்டு ஓட்டப்போட்டி களில் கவனம் செலுத்த ஆரம்பித்த அவர் தற்போது அங்கவீனர்களுக்கான 100 மீற்றர் , 200மீற்றர் , 400 மீற்றர் போட்டிகளில் உலக சாதனையாளர். 2004ஆம் ஆண்டு அங்க வீனர்களுக்கான பராலிம் பிக் 100 மீற்றர், 200 மீற்றர் போட்டிகளில் தங்கப்பதக்கங்களையும் சுவீகரித்தார்.

பிஸ்டோரியஸ் அவற்றுடன் திருப்தியடையவில்லை. பூரண உடற்தகுதி கொண்டோருடன் ஒலிம்பிக்கில் போட்டியிட வேண்டும் என்பது அவரின் இலட்சியம். ஆனால் சர்வதேச மெய்வன்மைச் சம்மேளனங்களின் சங்கம் (ஐ.ஏ.ஏ.எவ்) சாதாரண போட்டிகளில் பங்குபற்றுவதற்கு கடந்த ஜனவரி மாதம் பிஸ் டோரியஸுக்குத் தடைவித்தது.

பிஸ்டோரியஸ் பயன்படுத்தும் பாரம் குறைந்த செயற்கை இழைக்கால்கள் அவருக்கு விசேட அனுகூலத்தை அளிக்கிறது என்பது ஐ.ஏ.ஏ.எவ்வின் வாதம்.

இதற்கு எதிராக சர்வதேச விளையாட்டுத் துறை பிணக்கு மத்தியஸ்த குழுவிடம் பிஸ்டோரியஸ் முறையீடு செய்தார். அண்மையில் பிஸ்டோரியஸிஸுக்கு ஆதரவாக இவ்வழக்கின் தீர்ப்பு வெளியாகியது.




எனவே தற்போது பீஜிங் ஒலிம்பிக்கின் 400 மீற்றர் போட்டியில்பங்கு பற்றுவதற்கு தகுதிபெறும் தீவிர முயற்சியில் பிஸ்டோரியஸ் ஈடுபட்டுள்ளார்.

பல மாதங்களை வழக்கு விவகாரத்தில் கழித்த நிலையில் ஒலிம்பிக்கிற்குதகுதிபெறுவதற்கு கடினமான பயிற்சிகளில்பிஸ்டோரியஸ்ஈடுபடநேரிட்டுள்ளது. எனினும் அவர் விட்டுக்கொடுப்பதாக இல்லை.

இப்பிரிவில் அவரின்சிறந்த நேரப்பெறுதி 46.33 விநாடிகளாகும். எனி னும் பீஜிங் ஒலிம்பிக்கிற்கு தகுதிபெறுவதற்கு 45.55 விநாடிகளில் அவர் ஓடிமுடிக்கவேண்டும்.

இந்நிலையில் ஜுலை 2 (மிலான்), ஜுலை 16 (லுசேர்ன்), ஜுலை 16 (ரோம்) ஆம் திகதி களில் நடைபெறும் சர்வதேச போட்டி களில் பூரண உடற்தகுதிகொண்டோரு டன் அவர் ஓடவுள்ளார். ஓட்டவீரர்கள் பீஜிங் ஒலிம் பிக்கிற்கு தகுதிபெறுவதற்கு ஜுலை இறுதி வரை அவகாசமுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5)

## அரை இறுதி வாய்ப்பு எப்படி?

ராஜஸ்தான் றோயல்ஸிடம் நேற்று முன்தினம் தோல்வியடைந்ததால் சென்னை சுப்பர் கிங்ஸ் அரை இறுதிக்கு முன்னேற முடியுமா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

ராஜஸ்தான் றோயல்ஸ், கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணிகள் அரை இறுதிக்கு தகுதி பெற்றுவிட்டன. கொல்கத்தா நைட் ரைடர்ஸ், டெக்கான் சார்ஜர்ஸ்மற்றும்பெங்களூர்றோயல் சலஞ்சர்ஸ் ஆகிய அணிகள் ஏற்கனவே அரை இறுதி வாய்ப்பை இழந்து விட்டன. சென்னை, மும்பை, டெல்லி ஆகிய அணிகள் இடையில் தான் அரை இறுதியில் நுழைவதற்கான போட்டி. இவற்றில் எந்த 2 அணி தகுதி பெறும் என்பது தான் கேள்வி.

சென்னை அணி கடைசிவரை லீக் ஆட்டத்தில் டெக்கான் சார்ஜர்ஸ் அணியை வென்றால் அரை இறுதியில் நுழைந்துவிடும். தோல்வி அடைந்தால் வாய்ப்பு கிடைக்குமா என்பதுதான் அடுத்த கேள்வி. மும்பை அணி தான் மோதும் 2 ஆட்டத்திலும் தோற்றால் தான் சென்னை அணிக்கு வாய்ப்பு கிடைக்கும்.

மும்பை அணி இன்று ராஜஸ்தானையும், நாளை மறுதினம் பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸையும் எதிர்கொள்கிறது. சென்னையைவிட மும்பை அணி ஓட்டவிகித சராசரியில் (Run Rate)நல்ல நிலையில் இருப்பதால் 2 ஆட்டத்திலும் தோற்றால் தான் சென்னை அணி வாய்ப்பை பெறமுடியும். டெக்கான் சார்ஜர்ஸ் சென்னை சுப்பர் கிங்ஸ் வென்றால் எந்த பிரச்சினையும் இருக்காது. மற்ற அணிகளின் ஆட்டத்தின் முடிவுக்காக காத்திருக்க வேண்டியதில்லை. (5)

# ஹரிப்பட்டரில் நடிக்க இருந்த நடிகர் லண்டனில் குத்திக் கொலை

(லண்டன்)

தயாரிப்பில் உள்ள ஹரிப்பட்டர் படத்தில் நடிக்கவிருந்த இளம் நடிகர் ராப் நாக்ஸ் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

உலகம் முழுவதும் குழந்தைகள் மட்டுமின்றி பெரியவர்கள் மத்தியிலும் பெரும் வரவேற்பை பெற்ற புகழ் பெற்ற ஹரிப்பட்டர் நாவல் புதிய திரைப்படமாக தயாரிக்கப்படவுள்ளது.

இந்த படத்தில் ஹரிப்பட்டர் வேடத்தில் ராப் நாக்ஸ் (வயது 18) என்ற இளம் நடிகர் நடிப்பதாக இருந்தது. இந்த நிலையில் லண்டனில் உள்ள பார் ஒன்றின் முன்பாக ராப் நாக்சுக்கும் ஒரு கும்பலுக்கும் இடையே தகராறு ஏற்பட்டுள்ளது.

இந்த தகராறில் ராப் நாக்சை ஒருவர் கத்தியால் குத்தியுள்ளார். இந்த மோதலின் போது மேலும் 5 இளைஞர்கள் காயமடைந்துள்ளனர். உடனடியாக அனைவரும் அருகில் உள்ள மருத்துவமனைகளுக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

ஆனால் ராப் நாக்ஸ் சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்தார். இந்த தகராறில் காயமடைந்து சிகிச்சை பெற்று வரும் ஒருவர் தான் ராப் நாக்சை குத்தியதாக கூறப்படுகிறது. இதையடுத்து பொலிஸார் அவரை கைது செய்துள்ளனர்.

ஹரிப்பட்டர் படத்தில் நாக்ஸ் மார்க்கஸ் பெல்பி கதாபாத்திரத்தில் நடிப்பதாக இருந்தார். இந்த நிலையில் ராப் நாக்ஸ் கொலை செய்யப்பட்டது அதிர்ச்சி அளிப்பதாகவுள்ளது என்று ஹரிப்பட்டர் படத்தை தயாரிக்கவுள்ள வார்னர் பிரதர்ஸ் நிறுவனம் கூறியுள்ளது. (அ-5)

# கொலம்பியாவில் நிலநடுக்கம் 9 பேர் பலி 10 ஆயிரம் வீடுகள் தரைமட்டம்

கொலாம்பியா நாட்டில் ஏற்பட்ட நில நடுக்கத்தில் 9பேர் பலியானார்கள். 10ஆயிரத்துக்கு மேற்பட்ட வீடுகள் இடிந்து தரைமட்டமானது. தென் அமெரிக்க நாடான கொலம்பியாவின் மத்திய பகுதியில் நேற்று திடீர் என்று நில நடுக்கம் ஏற்பட்டது. இந்த நில நடுக்கம் 5.7ரிச்டர் அளவில் பதிவானது. நில நடுக் கத்தில் தலைநகர் பகோட்டா, விலாவின் சென்சியோ ஆகிய நகரங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டன.

இந்த நில நடுக்கத்தால் பல்வேறு பகுதிகளில் நிலச்சரிவும் ஏற்பட்டது. மலைப் பகுதியில் இருந்து பாறைகள் உருண்டு விழுந்து ரோடுகளில் சென்ற கார்கள் மீது விழுந்தன. இதில்ஒருகுழந்தைஉள்பட 3பேர்பலியானார்கள்.

நிலச்சரிவில் ஏராளமான வீடுகள் மண்ணில் புதைந்து விட்டன. 10ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகள் கட்டிடங்கள் இடிந்து விழுந்தன. அரசு கட்டிடங்களும் தேசம் அடைந்தன.

இந்த நில நடுக்கத்தில் இதுவரை 9 பேர் பலியானதாக அதிகார பூர்வ தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-5)

# ஜனாதிபதி முகாபேவைத் தோற்கடிப்பேன்

## எதிர்க்கட்சித் தலைவர் சாங்கிராய் உறுதி

(சிம்பாவே)

சிம்பாவேயில் தேசிய ஒற்றுமை அரசு உருவாக வேண்டுமென்ற யோசனையை எதிர்க்கட்சித் தலைவர் மோர்கன் சாங்கிராய் நிராகரித்ததுடன் நடைபெறவுள்ள இரண்டாம் கட்டத் தேர்தலில் ஜனாதிபதி முகாபேவை தான் தோற்கடிப்பேனென மோர்கன் சாங்கிராய் உறுதிபூண்டுள்ளார்.

தென்னாபிரிக்காவிலிருந்து ஹராரே வந்துள்ள சாங்கிராய் கருத்துத் தெரிவித்த போது சூரியன் உதிக்குமென்பது எந்தளவு நிச்சயமானதோ அதேயளவு நிச்சயம் இரண்டாம் கட்ட வாக்குப்பதிவில் முகாபே தோற்பாரெனக் கூறினார்.

எதிர்க்கட்சியான ஜனநாயக மாற்றத்துக்கான இயக்கத்தினருக்கு எதிராக ஆளும் கட்சியினர் நடத்தும் வன்முறை மிகவும் மோசமானதென அவர் குறிப்பிட்டார்.



இதேவேளை மோர்கன் சாங்கிராயை படுகொலை செய்யும் சதித்திட்டம் குறித்து தாங்கள் கண்டறிந்ததாக கட்சிக்காரர்கள் கூறியதையடுத்து மோர்கன் சாங்கிராய் காலம் தாழ்த்தியே சிம்பாப்வே திரும்பியுள்ளார். (அ-5)

# அரசியல் எதிரிகளை கொன்று குவித்த கொங்கோ முன்னாள் துணை அதிபர் கைது

(கின்சாசா)

ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான காங்கோ குடியரசில் முன்பு துணை அதிபராக இருந்தவர் ஜீன் பீரே பெம்பா. கடந்த 2002ஆம் ஆண்டில் நடந்த அதிபர் தேர்தலில் இவரும் போட்டியிட்டார். ஆனால் தேர்தலில் இவர் தோல்வி அடைந்தார்.

அதன் பிறகு ஜீபீரே தனது தலைமையில் புரட்சிப் படை ஒன்றை ஏற்படுத்திக் கொண்டு தனது அரசியல் எதிரிகளுக்கு எதிராக தாக்குதல் நடத்தி வந்தார். ஆயி ரத்துக்கும் மேற்பட்ட அரசியல் எதிரிகளை இவர் கொன்று குவித்தார்.

அதன் பிறகு அங்கு ஆட்சி மாற்றம் ஏற்பட்ட போது பீரே வெளிநாட்டுக்கு தப்பி ஓடினார். அவர் மீது அரசியல் படுகொலைகள் நடத்தியதாக வழக்கு தொடரப்பட்டது.

இதில் தேடப்பட்டு வந்த ஜீன் பீரே பெல்ஜியம் நாட்டில் பொலிசாரால் கைது செய்யப் பட்டார். சர்வதேச நீதிமன்றில் அவர்ஆஜர் படுத்தப்படுகிறார். (அ-5)

# சீனாவை உலுக்கிய பூகம்பத்தில் 6500 மாணவர், ஆசிரியர் பலி

## பெற்றோர் கொந்தளிப்பு

(பீஜிங்)

சீனாவை உலுக்கிய பூகம்பத்தில் பலியானவர்களில் 12 சதவீதம் பேர் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் என சீனப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. பத்திரிகையில் சிசுவான் மாகாண கல்வி அதிகாரி டியூ வென்டோ அளித்த பேட்டி வெளியாகியுள்ளது. அவர் கூறியுள்ளதாவது, சீனாவில் கடந்த 12ஆம் திகதி ஏற்பட்ட பூகம்பத்தில் பலி யானவர்களின் எண்ணிக்கை 55 ஆயிரத்தை தாண்டியுள்ளது.

பலியானவர்களில் 6581 பேர் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள். மொத்த உயிரிழப்பில் இது 12 சதவீதம். பூகம்பத்தில் 13 ஆயிரத்து 451 பள்ளிகள் இடிந்து தரை மட்ட மாகியுள்ளன. பள்ளி இடிபாடுகளுக்குள் சிக்கியுள்ள இன்னும் பலர் மீட்கப்படவில்லை. மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பலியான சம்

## உலக தரிசனம்

பவம் தொடர்பாக தனியாக விசாரணை நடத்த அரசு உத்தரவிட்டுள்ளது. இவ்வாறு டியூ வென்டோ கூறினார்.

மாணவர்கள் அதிகமாக பலியான சம்பவம் பெற்றோர்களிடையே கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. இது குறித்து அவர்கள் கூறுகையில்,

பள்ளிகளில் தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் இல்லை. பள்ளிகளில் உள்ள அவசர வழிகள் நீண்ட நாட்களாக மூடப்பட்டு கிடந்தன. இதனால் பூகம்பம் ஏற் பட்டபோது மாணவர்கள் வேகமாக வெளியேற முடியவில்லை என்றனர். (அ-5)


# முஷாரப்பின் அதிகாரங்களை பறிக்க சர்தாரி தலைமையில் ஆலோசனை

(இஸ்லாமாபாத்)

அதிபர் முஷாரப்பின் அதிகாரங்களை பறிப்பது, பதவி நீக்கம் செய்யப்பட்ட நீதிபதிகளை மீண்டும் பதவியில் அமர்த்துவது மற்றும் அரசியல் சட்ட திருத்தம் கொண்டு வருவது தொடர்பாக பாகிஸ்தான் மக்கள் கட்சி தலைவர் ஆசிப் அலி சர்தாரி தனது கட்சியினருடன் ஆலோசனை நடத்தினார்.

ஜனநாயக ரீதியாக தேர்ந்தெடுக்கப்படாத ஒரு அதிபர் முஷாரப், அவரின் கதை பழைய பஞ்சாங்கம். அவர் பதவி விலக வேண்டும் என மக்கள் எதிர்ப்பார்க்கின்றனர் என்று சமீபத்தில் செய்தி நிறுவனம் ஒன்றுக்கு பேட்டி அளித்த பாகிஸ்தான் மக்கள் கட்சித் தலைவர் ஆசிப் அலி சர்தாரி கூறினார். இதையடுத்து பாக் மக்கள் கட்சி உடனான அனைத்து தொடர்புகளையும் அதிபர் முஷாரப் துண்டித்துக்கொண்டார்.

இந்த சூழ்நிலையில் பாக். மக்கள் கட்சியின் மத்திய செயற்குழு கூட்டம் நேற்று முன்தினம் நடந்தது. சர்தாரி தலைமையில் நடந்த இந்தக் கூட்டத்தில் தான் மேற்கண்ட விஷயங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டன. பலுசிஸ்தான் சிந்து மாகாண முதல்வர்கள் உட்பட பலர் கூட்டத்தில் கலந்துகொண்டனர். கூட்டத்தில் அரசியல் சட்ட திருத்தத்தின் வரைவு நகலுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு அதை கூட்டணிக் கட்சிகளுக்கு அனுப்பவும் தீர்மானிக்கப்பட்டது.



62 சட்ட திருத்தங்கள் தாக்கலாக இருக்கிறது. அதிபரின் அதிகாரங்கள் பிரதமரிடம் ஒப்படைப்பது, அதிபர் இரண்டு தடவைக்கு மேல் நீடிக்கக்கூடாது என்பன புதிய சட்டங்களில் முக்கியமானவை.

இந்த அரசியல் சட்ட திருத்தம் அடுத்த மாதம் நாடாளுமன்றத்தில் நிறை வேற்றப்பட்டால் பிரதமரைப் பதவி நீக்க வும், நாடாளுமன்றத்தைக் கலைக்கவும் அதிபர் முஷாரப்பிடம் உள்ள அதிகாரம் பறிக் கப்படும் அதேநேரத்தில் இராணுவ ஆட்சியில் பதவி நீக்கம் செய்யப்பட்ட நீதிபதிக ளும் மீண்டும் பணியில் அமர்த்தப்படுவர்.

இதற்கிடையில் தன் அதிகாரங்களை பறிக்க முற்படும் பாக் மக்கள் கட்சியின் நடவடிக்கைக்கு அதிபர் முஷாரப் கடும் எதிர்ப்புத் தெரிவிப்பார். அவர்களின் முயற்சியை முறியடிக்க முற்படுவார் என சில தொலைக் காட்சிகள் செய்தி வெளியிட்டுள்ளன. எதிர்க் கட்சி ஒன்றும் அரசியல் சட்ட திருத்தத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளது என்பது குறிப்பிடத் தக்கது. (அ-5)

# சுற்றுச்சூழல் சீர்கேட்டால் மணிக்கு மூன்று உயிரினம் அழிவு

(லண்டன்)

உலகில் உள்ள உயிரினங்களில் ஒவ்வொரு மணி நேரத்துக்கும் மூன்று உயிரினங்கள் அழிந்து வருவதாக ஐ.நா. அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இயற்கை சீரழிவு சுற்றுச் சூழல் மாசு குறித்து ஜெர்மனியில் நடந்த மாநாட்டில் 193நாடுகள் கலந்து கொண்டன. இதில் ஐ.நா பொதுச் செயலர் பான் கீ மூன் தாக்கல் செய்த அறிக்கையில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகில் டைனோசர் இனங்கள் அழிந்து 6.5கோடி ஆண்டுகளுக்குப் பின் உயிரினங்கள் ஆழிவது இப்போது தான் பெரிதும் அதிகரித்து வருகிறது. ஒவ்வொரு மணி நேரத்துக்கும் மூன்று உயிரினங்கள் அழிந்து வருகின்றன. ஓராங்உட்டான், சிம்பன்சி, யானை உள்ளிட்ட பாலூட்டி உயிரினங்களில் நான்கில் ஒன்று அழிந்து வருகிறது. அதேபோல பறவைகளில் எட்டு வகைகளில் ஒன்றும் நீர் மற்றும் நிலத்தில் வசிக்கும் உயிரினங்களில் மூன்றில் ஒரு பகுதி வகைகளும் அழிந்து வருகின்றன. தாவரங்களின் வாழ்நாள் 70 சதவீதமாகக் குறைந்து வருகிறது. இவை எல்லாவற்றுக்கும் காரணம் மனிதர்களால் ஏற்படுத்தப்பட்டு வரும் மிக அதிகளவிலான சுற்றுச் சூழல் மாசு தான். உலக வெப்பமயத்தாலும், சுற்றுச் சூழல் சீர்கேட்டாலும், காடுகளை அழிப்பதாலும் உயிரிணங்கள் அழிவை நோக்கிச் செல்கின்றன. தாவரங்களின் வாழ்நாள் குறைவதும் உணவு பற்றாக் குறை கடுமையாக அதிகரிக்கும் என்று எச்சரிக்கப் பட்டுள்ளது. இவற்றைத் தடுக்காவிட்டால் மனித வாழ்க்கையின் அடிப்படையே அழித்து விடும் என்று அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (அ-5)

# ஈராக்கில் இருந்து மேலும் படை வாபஸ்

## இராணுவம் அறிவிப்பு-எம்.பிக்கள் வரவேற்பு

(பக்தாத்)

ஈராக்கில் அமைதியை நிலைநாட்ட 1லட்சத்து 54ஆயிரம் அமெரிக்க படைகள் முகாமிட்டுள்ளன.

கடந்த ஆண்டு அங்கு அனுப்பப்பட்ட 30ஆயிரம் படையினர், வரும் ஜூலை மாதம் வாபஸ் பெறப்படுகிறார்கள்.

இந் நிலையில் இலையுதிர் காலத்தில் அதாவது டிசம்பர், ஜனவரி மாதங்களில் மேலும் கூடுதலாக படைகள் வாபஸ் பெறப் படும் என்று ஈராக்கில் உள்ள அமெரிக்க இராணுவ பொறுப்பாளர் டேவிட்பெட்ரேயஸ் தெரிவித்துள்ளார். இத்தகவலை அவர் அமெரிக்க செனட் சபைக்கு அளித்த தகவலில் தெரிவித்துள்ளார். அதை அமெரிக்க எம்.பி.க்கள் வரவேற்றுள்ளனர். (அ-5)

# நியூசிலாந்துக் கல்வி 2

### ஆங்கிலமே அடிப்படை

நியூசிலாந்துக் கல்விக்கு அடிப்படை ஆங்கிலத்திறனே. ஐ.இ.எல்.டி.எஸ்.தேர்வில் 6க்கு 5.5 புள்ளிகள் பெற்றவரே நியூசிலாந்தில் கல்வி பயில தகுதியானவர்கள். ஆங்கிலத்தில் பேசுவது, எழுதுவது மற்றும் புரிந்து கொள்ளும் திறன்கள் பரிசோதிக்கப்படுகிறது. நியூசிலாந்தில் கல்வி தரப்படுவது இவற்றில் தான்...

- விவசாயம், ஹார்ட்டிகல்ச்சர், காடு வளர்ப்பு,வேட்டையாடுதல், சுரங்கவியல்
- போக்குவரத்து
- சுகாதாரம் மற்றும் சமூகக்கல்வி
- இன்ஜினியரிங்
- டூரிசம்
- அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல்
- கொம்ப்யூட்டர் சயன்ஸ்
- இன்சூரன்ஸ்
- பிஸ்னஸ் அட்மினிஸ்டிரேஷன்
- கலாசாரம், தகவல் மற்றும் பொழுது போக்குத்துறை
- சட்டப் படிப்புகள்
- பாதுகாப்புத்துறை
- உற்பத்தியியல்

இனிசில சிறந்தநியூசிலாந்துபல்கலைக்கழகங்களை பார்க்கலாம்

### ஓக்லாந்து பல்கலைக்கழகம்

இது நியூசிலாந்தின் மிகப் பெரிய பல்கலைக் கழகமாகும். 1883 இல் ஆரம்பிக்கப்பட்ட இது ஆராய்ச்சித் துறைக்காக பெயர் பெற்றது. உலகளாவிய அங்கீகாரத்துடன் செயல்படுகிறது. ஆய்வு மற்றும் சேவையில் மிக உயரிய தரத்தை எட்டவேண்டும் என்ற நோக்கில் நிறுவப்பட்டது.

சமூக, பொருளாதார மற்றும் கலாசார மாறுபாடுகளை உள்ளீர்த்து இங்கு கற்கும் மாணவர்களும் அதை உணர்ந்து செயல்படக் கூடிய சந்ததியினராக மாற்ற இது முயலுகிறது. நியூசிலாந்தின் பெரிய நகரமான ஓக்லாந்தில் இது அமைந்திருக்கிறது. இதில் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் படிக்கிறார்கள்.

கலை, தொழில், நிர்வாகம், பொருளாதாரம், கல்வியாளர் கல்வி, இன்ஜினியரிங், சட்டம், மருத்துவம் மற்றும் அறிவியல் போன்ற பிரிவுகளில் படிப்புகள் தரப்படுகின்றன. இவை தவிர இறையியல் படிப்பும் தரப்படு கிறது. இதில் 80 நாடுகளைச் சேர்ந்த 4ஆயிரம் மாணவர்கள் படிக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இந்தப் பல்கலைக்கழகத்திற்கு ஒரு இலட்சம் பழைய மாணவர்கள் உள்ளனர். இதில் 20 ஆயிரம் பேர் வெளிநாட்டு மாணவர்கள்.

### கேன்டர்பரி பல்கலைக்கழகம்

நியூசிலாந்தின் தெற்கு தீவுப்பகுதியிலுள்ள கிரைஸ்ட்சேர்ச் பகுதியில் இது அமைந்திருக்கிறது. இந்தப் பல்கலைகழகம் உலகத் தரம்




வாய்ந்த ஆராய்ச்சி, ஆழ்ந்த கல்விப் பயிற்சி, மிகச் சிறந்த கல்விச் சூழல் மற்றும் பன்னாட்டு மாணவர்கள் படிப்பது என பல சிறப்புகளைப் பெற்றுள்ளது.

இந்தியா போன்றே கலை வணிகவியல் அறிவியல் போன்றவற்றில் பட்டப்படிப்புகளும் அறிவியல் புலத்தில் ஹானர்ஸ் படிப்புகளும் தரப்படுகிறது.

முதல் ஆண்டிலேயே பாடத்தைத் தேர்வு செய்யாமல் திறனைப் பொறுத்து 2ஆம் ஆண்டு விருப்பப் பாடத்தைத் தேர்வு செய்யும் வசதி தரப்படுகிறது. இதுதவிர இன்ஜினியரிங், கலை, வனவியல், சமூகப்பணி, மொழி போன்றவற்றில் தொழில் படிப்புகளும் உண்டு. இதுதவிர 4ஆண்டுகளில் முடிக்கக் கூடிய சட்டப்படிப்பு, இசைப்படிப்பு, கல்வியியல் போன்ற படிப்புகளும் தரப்படுகின்றன.

### விக்டோரியா பல்கலைக்கழகம்

பிரிட்டனின் மகாராணியான விக்டோரியா ராணியின் வைர விழாவை கௌரவிக்கும் விதத்தில் அவரது பெயர் சூட்டப்பட்டு தொடங்கப்பட்டது. இப் பல்கலைக்கழகம் நியூசிலாந்தில் கௌரவம் மிக்கதும் புகழ் பெற்றதுமாக இது திகழ்கிறது. சிறப்பான தலைமைப் பண்புகளைக் கொண்ட மாணவர்களை உருவாக்குவதற்காக பெயர் பெற்றது.

இங்கு பல்வேறு புலங்களில் மிகச் சிறந்த ஆசிரியர்களால் கல்வி போதிக்கப்படுவதோடு மாணவர்களின் தரமும் உலக அளவில் அறியப்படுகிறது. இங்க கட்டடவியல் வடிவமைப்பு, மானுடவியல், சமூக அறிவியல், சட்டம், அறிவியல், இன்ஜினியரிங், கல்வியியல், வணிகவியல் மற்றும் பிஸ்னஸ் அட்மினிஸ்டிரேஷன் ஆகிய துறைகள் மிகச் சிறப்பாகச் செயல்படுகின்றன.

### நியூசிலாந்து கல்விக்கு இவை தான் தேவை

எந்தப் பல்கலைக்கழகத்தைத் தேர்வு செய்கிறோமோ அதற்கு விண்ணப்பித்து அதில் சேருவதற்கான அனுமதியைப் பெறுவது முதல்படி. படிப்பு தொடங்குவதற்கு 2 மாதங்களுக்கு முன்பே இதற்கான முயற்சி தேவை. ஐ.இ.எல்.டி.எஸ் தேர்வில் தகுதி பெற்றிருப்பதும் முக்கியம். பின்பு நியூசிலாந்தின் தூதரகத்தில் விசாவுக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

**ஆர்.யூ.பாலமுருகன்**

விசா பெற வைத்திருக்க வேண்டியது என்ன?

- பாஸ் போர்ட்
- கல்வித் தகுதிக்கான ஆதாரங்கள்
- படிக்க விரும்பும் நியூசிலாந்து பல்கலைக்கழகத்தில் படிப்பதற்காக தேர்வு செய்யப்பட்ட ஆணை
- ஐ.இ.எல்.டி.எஸ் புள்ளி பட்டியல்
- கல்விச் செலவு/விடுதிச்செலவு,/போக்குவரத்துச் செலவு போன்றவற்றை சந்திக்கும் பொருளாதார சக்திக்கான ஆதாரம் அல்லது நியூசிலாந்துப் படிப்புச் செலவை ஏற்றுக் கொள்ளும் ஸ்பான்சரின் கடிதம்
- தேவைப்படுவோருக்கு மருத்துவத் தகுதிச் சான்றிதழ்.

# கணக்கீடு மற்றும் சந்தைப்படுத்தல் துறையில் பட்டதாரியாகும் வாய்ப்பு

''கல்வி கரையில் கற்பவர் நாள் சில மெல்ல நினைக்கில் பிணிபல்'' என்பது வள்ளுவர் வாக்கு.

இவ்வுலகில் நாம் வாழும் நாட்கள் சில, அதிலும் கல்விக்காகச் செலவு செய்யும் நாட்கள் மிகச் சில, அக்காலத்தில் எதிர் கொள்கின்ற தடைகள் தான் எத்தனையோ? எனவே நாம் கற்கும் இந்த சிறிய காலத்தில் மிகவும் பயனுள்ள நல்ல தொழில் வாய்ப்பைப் பெற்றுத்தரக் கூடிய கல்வியைப் பெற்றுக்கொள்ள வேண்டியது ஒவ்வொருவரினது அபிலாஷையாகும்.

அத்தகைய ஒரு சிறந்த நிலைமைக்கு உங்களை வழிகாட்டு வதற்கு உகந்ததே Alca college.

இந் நிறுவனத்தினால் கனேடிய நிறுவனத்தின் (Robetech Institute Inc -canada) கிளைக் காரியாலயமாக தொழில்பட்டு வருகின்றது.

கடந்த 6 வருட காலமாக கணனித் துறை, முகாமைத்துவத்துறை, வெளிநாடு சென்ற உயர் கல்வி கற்பதற்கான ஒழுங்குகள் ஆகியவற்றில் அனுபவம் பெற்ற Alca நிறுவனத்தின் கடந்த வருடம் கனேடிய அங்கீகாரம் பெற்ற அழகுக் கலைப் பயிற்சி, சர்வதேச தரத்தினை IFA,CIM,CMA போன்ற பாடநெறிகளையும் அறிமுகப்படுத்தியுள்ளனர்.

ஒவ்வொரு மாணவனின் வெற்றியும் அம் மாணவனின் 50% மும் ஆசிரியரின் 50%மும் தங்கியுள்ளது. அந்தவகையில் Alca College ஆனது சிறந்த கல்வியை மாணவர்களுக்கு வழங்கி வருகின்றது.

கணனித் துறையில் இந்நிறுவனம் சிறந்த இந்திய, மலேஷியப் பட்டதாரிகள் மூலம் பல நல்ல தொழில்வாய்ப்பைத் தரக் கூடிய உள்நாட்டு, வெளிநாட்டு கற்கை நெறியை மாணவர்களுக்கு வழங்குகின்றது.

அவையாவன Diploma in Software Engineering,Diploma in Computer Science, SCIP,Civil CAD, MCP, IELTS, Spoken English & Sinhala,Diploma in Digital , Designing, Diploma in Studio making, Graphic,Web Designing & Network Engineering, Visual Studio, Net Programming, Business English & Computerized Accounting.

இந் நிறுவனம் அறிமுகப்படுத்தும் மேற்படி கற்கை நெறிகள் பிரபல்யம் மிக்கவை. மாணவர்களின் தன்மைக்கேற்ற வகையில் சிறந்த விளக்கக் குறிப்புகளுடன் 100% செய்முறைப் பயிற்சியையும் கொண்டமைந்த பாடநெறியாகும்.

அதுமட்டுமல்லாமல் மேற்படி கற்கை நெறிகள் யாவும் சிறந்த கணனி அதனை வழங்குவதுடன் IT Field இல் சிறந்த தொழில் வாய்ப்பையும் பெற்றுக்கொடுக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இப் பாடநெறி முடிவில் சர்வதேச அங்கீகாரம் (Canada) பெற்ற சான்றிதழ் வழங்கப்படும் UK, Canada போன்ற நாடுகளில் உயர் கல்விக்கு விண்ணப்பிக்கும் மாணவர்களுக்கு அனுமதியினைப் பெற்றுக்கொள்ள இச் சான்றிதழ் மிகவும் உதவியாகவும் உறுதுணையாகவும் இருக்கும்.

இன்று நம்நாட்டிலுள்ள அநேகமான மாணவர்கள் எதைப் படிப்பது, எந்தத் துறையைத் தெரிவு செய்தால் இலகுவில் வாழ்க்கை இலட்சியங்களை அடையமுடியும் என்று மனதிற்குள்ளே அங்கலாய்த்துக் கொண்டிருப்பர்.

அதுமட்டுமல்லாமல் குறைந்த காலத்தில் தமது பட்டப் படிப்புக்களை முடிப்பதற்கே மிகவும் விரும்புவர். அந்த வகையில் Alca College இனால் நடத்தப்படுகின்ற IFA, CIM பாடநெறிகள் பல நன்மையான விடயங்களை மிகவும் எளிதில் பெற்றுக்கொள்ள முடியும்.

இவ் CIM பாடநெறியானது உங்களுடைய தகைமைகளுடன் சவால்களை எதிர் நோக்கக் கூடிய அளவிற்கு உங்களை வழி காட்டும்.

நீங்கள் O/L ,A/L முடித்த மாணவரா? வேலைசெய்து கொண்டிருப்பவரா? அல்லது வேலை தேடுபவரா? அல்லது சந்தைப் படுத்தல் துறையில் ஈடுபட விரும்புகிறவரா ? இதில் எதுவாக இருந்தாலும் உங்கள் தெரிவு CIM பாட நெறியாக இருக்குமானால் அது உங்கள் முன்னேற்றத்திற்கு பக்கபலமாக இருக்கும்.

இப்போதைய நவீன உலகில் கணக்கீட்டு துறைக்கு பெரும் மவுசும், கிராக்கியும் ஏற்பட்டுள்ளது.

இத் துறையில் என்னவிசேடம் என்றால் பகுதிநேர வேலைக்கு சென்றாவது உழைக்கக் கூடிய அளவிற்கு பரவலாக வேலை வாய்ப்பைப் பெறமுடியும்.

இவ் IFA ,UK நிறுவனம் 1916 ஆம் ஆண்டு நிறுவப்பட்டு உலகில் மிகப் பெரிய ஒரு தொழில் சார் பயிற்சி நிறுவனமாக இயங்கிவருகிறது. உலகில் 80க்கும் மேற்பட்ட நாடுகளில் அங்கத்தவர்களையும் பல்லாயிரக்கணக்கான மாணவர்களையும் கொண்டு பிரதிநிதித்துவம் பெற்று விளங்குகிறது.

யார் நல்லதொரு கணக்காளராக வருவதற்கு விரும்புகிறார்களோ அவர்கள் வருவதற்குரிய அனைத்துத் தொழில் சார் பயிற்சிகளையும் தகைமைகளையும் வழங்கி வருகிறது.

அத்துடன் தொழில்நுட்ப ரீதியானதும் நெறிமுறை பற்றியதுமான இரு தரத்துடனும் இப் பாடநெறி அமைக்கப்பட்டுள்ளது.

இந்த IFA Course Professional ரீதியாக தங்களுடைய ஆற்றலை வெளிப்படுத்த ஒரு நல்ல சந்தர்ப்பமாக அமைகிறது. கணக்கீட்டுத்துறையில் ஆர்வமுள்ளவர்கள் மற்றும் இளமாணி,முதுமாணி பட்டப் படிப்புக்களை மேற்கொள்ள விரும்புபவர்களும் இதனைப் பயிலமுடியும்.

மேலும் 3 பகுதிகளைக் கொண்ட (Technician, Associate, Fellow Member) இப் பாட நெறியில் 18 மாத முடிவில் பின்னர் University of Bolton -UK இல் இறுதி யாண்டு கற்கைநெறியான BA (Hons) Degree in Accountancy இற்கு நேரடியான அனுமதியினைப் பெற்றுக்கொள்ள முடியும்.

$1\frac{1}{2}$ வருட படிப்பினைப் பூர்த்தி செய்கின்ற மாணவர்கள் UK, Canada,Australia போன்ற நாடுகளில் அனுமதியைப் பெறலாம்.

இப் பாடத் திட்டத்தின் பகுதித் தகைமைகள் (part Qualified) அடைகின்ற போது 2ஆம் வருட / 3ஆம் வருட படிப்பிற்கான (Exemption) விலக்கினை Institute of chartered Accounts in England & Wales மற்றும் பிரதான பல்கலைக்கழகங்களில் நேரடியாக பெறமுடியும்.

இது ஒரு அறிவாற்றல் மிக்க ஊக்கமளிக்கின்ற ஒரு சந்தர்ப்பமாகும்.

முதல் Stage முடிந்தால் நேரடியாக BA (Hons) Degree யை முடிப்பதற்கு நேரடியாக Bolton University க்கு விண்ணப்பிக்க முடியும். இதற்கான விஸா ஆலோசனைகளும் ஏனைய ஒழுங்குகளும் Alca College இனால் செய்து கொடுக்கப்படும்.

வெளிநாட்டு உயர்கல்வி பற்றி சிந்திக்கும் மாணவர்கள் UK,USA ஆகிய நாடுகளுக்கே முக்கியத்துவம் அளித்து வருவதைக் காண லாம்.

ஆனால் எல்லோரிற்கும் அந்த வாய்ப்பு கிடைப்பது அரிது.

ஆனால் உங்கள் கனவுகளை நனவாக்கும் வகையில் ஆகக் குறைந்த தகுதியான க.பொ.த சாதாரண தரத்துடன் IELTS (International English Language Testing System) இன்றி சிறந்த கல்லூரிகளில் விண்ணப்பிக்க முடியும்.

க.பொ.த. சாதாரண தரத்துடன் நீங்கள் விரும்பும் கற்கை நெறியினை மலேசியாவிலும் சிங்கப்பூரிலும் கற்கலாம்.

எட்டு மாத காலத்தின் பின்போ/ ஒரு வருட காலத்தின் பின்போ / இறுதியாண்டு கற்கை நெறியோ நீங்கள் விரும்பினால் UK,USA , Canada,Australia, France போன்ற நாடுகளுக்கு மாற்றிக்கொள்ளமுடியும். அத்துடன் IELTS Sponser இல்லாத மாணவர்கள் கூட இதன் மூலம் விண்ணப்பிப்பதன் ஊடாக விரும்பிய நாட்டில் விரும்பிய கற்கை நெறியினை தொடருவதற்கு இது ஒரு நல்ல வாய்ப்பாகும்.

எனவே மிக இலகுவாகவே உங்கள் உயர்கல்விக்கானபயணத்தினை மேற்கொள்ள முடியும்.

நீங்கள் நினைத்தவாறே உங்கள் பட்டப் படிப்பினைத் தொடர மலேஷியா, சிங்கப்பூரை சிறந்த தளமாகத் தேர்வுசெய்து விரும்பிய நாடுகளில் இறுதியாண்டை நிறைவு செய்யலாம்.

இதற்குரிய அனைத்து ஏற்பாடுகளையும் ஆலோசனைகளையும் Alca College வழங்கி வருகின்றது.

உங்கள் ஆங்கில அறிவு குறைவாக இருக்குமாயின் (Low Level) அத்துறையில் சரியாக முன்னேற வேண்டுமானால் அது தொடர்பான பயிற்சியும் வழிகாட்டலும் Alca வினால் ஒழுங்கமைத்துக் கொடுக்கப்படும்.

உங்கள் எதிர்காலம் உங்கள் கையில் உங்கள் எதிர்காலத்தை சரியான முறையில் அமைக்க வேண்டுமானால் தொடர்பு கொள்ளுங்கள்.

**Alca College ,**
**No.01,01 st Floor, Vaverset Place.**
**Colombo 6.**
**Tel. 0112 361333.**

## கிழக்கு மாகாண சபைத் தேர்தல்

# வாக்களிப்புத் தொடர்பாக வெளியிடப்பட்ட தரவுகளை ஏற்றுக்கொள்ள முடியாது

### பவ்ரல் அமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் அடுத்த வருடத்தில் 7மாகாண சபைகளின் ஆட்சிக் காலம் நிறைவடையவுள்ள நிலையில் தனித் தனியே தேர்தல்களை நடத்தாமல் ஒரே தினத் தில் நடத்துமாறு உள்ளூராட்சி மாகாணசபை அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோனி டம் பவ்ரல் அமைப்பு வேண்டுகோள் விடுத்துள் ளது.

கிழக்கு மாகாண சபைத் தேர்தல் வாக் களிப்பு தொடர்பாக தேர்தல் ஆணையாளரி னால் வெளியிடப்பட்ட தரவுகளையை சில வாக்குச் சாவடிகளில் அளிக்கப்பட்ட வாக்குக ளின் சதவீதத்தை ஏற்றுக்கொள்ள முடியா தென பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

வெளிநாடு சென்றவர்கள், மரணமடைந் தவர்கள் மற்றும் வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டவர்களின் வாக்குகள் சில வாக் குச்சாவடிகளில் அளிக்கப்பட்டதாக தகவல்கள் கிடைத்துள்ளனவெனக் குறிப்பிட்ட பவ்ரல் அமைப்பின் ஊடக இணைப்பாளர் கீர்த்தி தென் னக்கோன், இது தொடர்பில் வாக்களிப்பு நிலை யங்களுக்குப் பொறுப்பாகவிருந்த அதிகாரிகள் னால் எவ்வித எழுத்துமூல அறிக்கைகளும் சமர்ப்பிக்கப்படவில்லையென கூறினார். எனவே தேர்தல் வன்முறை நடைபெற்ற நிலை யங்கள் குறித்து சட்ட நடவடிக்கை எடுக்க முடியாதென கீர்த்தி தென்னக்கோன் குறிப் பிட்டார். (அ-5)

# தேர்தல் முடிவுகளுக்கு எதிராக ஐ.தே.க,ஸ்ரீ.மு.கா. வழக்குத்தாக்கல்

(கொழும்பு)

கிழக்கு மாகாண சபைத் தேர்தல் முடிவு களை எதிர்த்து ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் வழக்கு தாக்கல் செய்யவுள்ளன.

எதிர்வரும் 30திகதி வெள்ளிக் கிழமை வழக்கு தாக்கல் செய்யப்பட இருப்பதாக ஐக் கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்த நாயக்க தெரிவித்தார்.

இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் இதுவரை நடந்த தேர்தல்களில் கிழக்கு மாகாண சபைத் தேர்தலே ஊழல், மோசடித் வாக்கு கொள்ளை ஆகியன நிகழ்ந்த மிக மோசமான தேர்தல் என பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க மேலும் தெரிவித்தார்.

இதற்கிடையில் கிழக்கு மாகாண சபை தேர்தல் மோசடியான முறையில் நடைபெற் றது என்பதை மக்களுக்கு விழிப்பூட்டும் வகையிலான போராட்டத்தை நாடளாவிய ரீதி யில் நடத்துவதற்கு ஐக்கிய தேசிய கட்சி முடிவு செய்திருக்கிறது. (ந-5)

# இலங்கையின் மனித உரிமை பேணல் நடவடிக்கைகள் வலுப்படுத்தப்பட வேண்டும்

### அமெரிக்கத் தூதரகம் அறிக்கை

(கொழும்பு)

இலங்கை மனித உரிமைகளைக் காப்பது தொடர்பில் அவசியமான நிறுவன ஏற்பாடு களைக் கொண்டிருக்கிறது. எனினும் அதனை உரிய முறையில் முன்னெடுத்து செல்வதற் கான அதிகாரங்களை குறித்த நிறுவனங்கள் கொண்டிருக்கவில்லை என அமெரிக்காவின் மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகத்திற் கான உதவிச் செயலர் எரிக்கா பார்க்ஸ் ரக்லஸ் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை இலங்கைக்கு வந்த அவர் நேற்று தமது விஜயத்தை நிறைவு செய்து கொண்டார்.

இவர் இலங்கையில் அதிகாரிகள் மட்டத் தினரை சந்தித்து உரையாடினார். இவரின் இந்த விஜயத்தின் பின்னர் இலங்கையில் உள்ள அமெரிக்கத் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் இலங்கையில் கடத்தல் கள் மற்றும் காணாமல் போதல் போன்ற சம்ப வங்களில் மேலும் பாதுகாப்புத் தேவை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இலங்கையில் ஊடக சுதந்திரத் திற்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அந்த அறிக் கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாக்ஸ் ரக்லஸ் 2001ஆம் ஆண்டில் இருந்து அமெரிக்க இராஜாங்கத் திணைக் களத்திலும் வெள்ளை மாளிகையிலும் தேசிய பாதுகாப்பு விடயம் தொடர்பில் சேவை யாற்றியுள்ளார். (அ-5)

## கனடா செல்வதற்காக

### போலியான திருமண உறவுகளைத் தெரிவிப்போரை கண்டறிய இரகசிய அதிகாரிகள் குழு அனுப்பிவைப்பு

(கொழும்பு)

வசதி கருதி ஏற்படுத்தப்பட்ட போலியான திருமண உறவுகளின் மூலம் கனடாவுக்கு வருபவர்கள் தொகை அதிகரித்து வருவதை கவனத்திற் கொண்டு அந் நாட்டு அரசாங்க மானது இத்தகைய மோசடித் திருமணங்கள் தொடர்பான தகவல்களைச் சேகரிக்க பல நாடு களுக்கு இரகசிய அதிகாரிகள் குழுக்களை அனுப்பி வைத்துள்ளதாக கூறப்படுகிறது.

இது தொடர்பான தகவல் கனடாவிலி ருந்து வெளிவரும் முன்னணி தினசரியான 'த குளோப் அன்ட் மெயில்' பத்திரிகையில் வெளி யிடப்பட்டுள்ளது. கனடாவின் குடியுரிமை மற் றும் குடிவரவு திணைக்களமானது ஒவ் வொன்றும் 5பேருக்கும் அதிகமானோரைக் கொண்ட குழுக்களை குடியேற்ற வாசிகளின் திருமணம் தொடர்பான தகவல்களை விசா ரித்தறிய பல நாடுகளுக்கும் அனுப்பிவைத் துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

விசாவைப் பெறுவதன் பொருட்டு புகைப் படத்திற்கு போலியாக திருமண கோலத்தில் தோன்றியவர்கள் தொடர்பில் விபரங்களைச் சேகரித்து நடவடிக்கை எடுக்கவுள்ளதாக தெரி விக்க கனடிய அரசாங்கத் தரப்பு வட்டாரங்கள் எந்தெந்த நாடுகளுக்கு இக்குழுக்கள் அனுப்பப் பட்டுள்ளன என்ற தகவலை வெளியிட மறுத் துள்ளதாக மேற்படி செய்தியில் குறிப்பிடப்பட் டுள்ளது.

அத்துடன் கனடாவில் இணைந்து வாழ விரும்பும் ஜோடியினரிடம் சிறந்த கேள்வி களைக் கேட்டு உண்மையை வரவழைப்ப தற்கு விசா உத்தியோகத்தர்களுக்கு பயிற்சிய ளிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தற்போதைய கனடிய குடிவரவு முறைமை யின் கீழ் வேறொரு நாட்டைச் சேர்ந்தவர் கன டியர் ஒருவரை திருமணம் செய்வதன் மூலம் ஆறு மாத காலப்பகுதிக்குள்ளே கனடாவுக் குள் உள்நுழைய முடியும். ஏனையவர்களை கனடாவுக்குள் நுழைய 6வருடங்களுக்கும் அதிகமான காலம் காத்திருக்க வேண்டியுள் ளமை குறிப்பிடத்தக்கது. (அ-5)

# ஐ.நா.ஆணைய உறுப்புரிமை இழப்பு அரசியல் கட்சிகள் கடும் விசனம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை கள் ஆணையகத்தின் உறுப்புரிமை இழந் தமை குறித்து அரசியல் கட்சிகள் கடும் விச னம் தெரிவித்துள்ளன.

**மனித உரிமை மோசமாக மீறப்பட்டன ஐக்கிய தேசியக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் லக்மன் கிரியெல்ல**

அரச தலைவராக மஹிந்த பொறுப்பேற்ற பின்னர் நாட்டில் மனித உரிமைகள் மிக மோச மாக மீறப்படத்தொடங்கின. ஐக்கிய தேசியக் கட்சி சுமார் இரண்டு ஆண்டுகளாக இது பற்றி அரசாங்கத்திற்கு விடயங்களை எடுத்துரைத்து வந்தது.

எனினும் அரசாங்கம் அதனை பொருட் படுத்த வில்லை. ஆட்கள் கடத்தப்பட்டனர் ,கப் பம் பெறப்பட்டது, ஆட்கள் கடத்தப்பட்டு படு கொலை செய்யப்பட்டனர், ஊடகவியலாளர் கள் தாக்கப்பட்டனர். இதனால் நாட்டின் சட்ட ஆதிபத்தியத்தின் மேன்மை நிலை இல்லாது போகின்றது. சட்டத்தின் நியாயம் எதிர்க்கட்சிக்கு கிடைக்காது போகின்றது. அரசாங்க உறுப்பி னர்களுக்கு எதிராக சட்டம் செயற்படுவதில்லை. இதற்கு சிறந்த உதாரணம் அமைச்சர் மேர் வின் சில்வா சம்பந்தப்பட்ட விடயம்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொல்லப் படுகின்றனர். சந்தேக நபர்கள் அடையாளம் காணப்பட்டாலும் அதனால் ஒரு பயனு மில்லை. இதனால் மனித உரிமைகள் மீறப்படுவதால் அனைத்துலக சமூகம் எம்மை பொருட் படுத் தாது விட்டு விட்டது. இலங்கை பெற்றதோல்வி யானது. ஒரு புறம் துயருறும் மக்கள் பெற்ற வெற்றியாகும்.

அரசாங்கம் மனித உரிமைகளை பாது காக்கும் நிறுவனங்களை பலப்படுத்தி மனித உரிமைகளை காக்க மிக விரைவில் நடவடிக்கை எடுக்கவேண்டும். எம்மை ஒதுக்கித் தள்ளிய தன் மூலம் மக்களின் மனித உரிமைகளை பாதுகாக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற தகவலை அனைத் துலக சமூகம் எமக்குக் கூறியுள்ளது.

நாட்டு மக்களின் மனித உரிமைகளை பாது காக்க நடவடிக்கை எடுக்க்வேண்டும் என்று அனைத்துலக சமூகம் அரசாங்கத்திடம் கூறி யுள்ளது. அதேபோல படுகொலைகளை செய் யும் நாடு, கப்பம் பெறும், சட்டம் என்பது இல் லாத நாடு என்ற பிழையான சித்திரம் உலகிற் குச் செல்கின்றது.

ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் பதவி யில் இருந்தபோது எமது நாடு மனித உரிமை சபையின் உறுப்புரிமைக்கு தெரிவானது. அதன் பின்னர் எமக்கு மனித உரிமை சபையின் பிரதித்தலைமைத்துவம் கிடைத்தது. ஏனெ னில் அன்று மனித உரிமைகளை மதிக்கும் நாடாக நாம் இருந்தோம். அன்று எமக்கு ஜி. எஸ்.பி. பிளஸ் போன்ற ஆடை தயாரிப்பு கோட் டாக்கள் கிடைத்தன.

எனினும் அதற்குரிய மனித உரிமை சட்டமூலங்கள் இதுவரை நாடாளுமன்றத் திற்கு கொண்டு வரப்படவில்லை தாமத மின்றி அந்தச் சட்டத்தை நாடாளுமன்றத் திற்கு கொண்டுவந்தால் அதற்கு வாக்களிக்க நாங்கள் தயார். எனினும் அரசாங்கம் கொண்டு வரவில்லை. இதனால் எமது ஆடை தயாரிப் புத்துறைக்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்படும். இதனையிட்டு அரசாங்கத்திற்கு அக்கறை இல்லாது விட்டாலும் ஆடை தயாரிப்புத் துறையை இந் நாட்டிற்கு அறிமுகம் செய்த கட்சி என்ற வகையில் எமக்கு அது மிக முக்கிய மாகிறது. நாம் தொடர்ந்தும் அனைத்துலகத் துடன் இணைந்து இந்நாட்டு மனித உரிமை களை பாதுகாக்க நடவடிக்கை எடுப்போம். மனித உரிமைகளை காக்க நாம் பேயுடனேனும் கூட் டுச் சேர்வோம்.

இலங்கையில் செயற்பாட்டு ரீதியாக மனித உரிமை நிலையம் என்பது இன்மையினா லேயே எமது மக்கள் தூதரகங்கள் ,அரசசார் பற்ற நிறுவனங்களை நாடிச் செல்கின்றனர்.

**மஹிந்த அரசாங்கம்பதில் சொல்லவேண்டும்ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர்விஜித ஹேரத்**

மனித உரிமைகளுக்காக தனியான அமைச்சர் உள்ளார். வெளிநாட்டு அலுவல் கள் அமைச்சர் உட்பட பெரும் தொகையான அமைச்சர்கள் உள்ளனர்.

ஆனால் அவர்கள் ஒருவராலும் இந்தப் பிரச்சினையை நாட்டிற்கு சாதகமான முறை யில் திருப்புவதற்கு முடியாமல் போய்விட்டது. அதேபோல மஹிந்தவுக்கு வெளிநாட்டு ஆலோசகர்கள் உள்ளனர்.

யாரும் எதனையும் செய்ததாக தெரிய வில்லை. அவர்கள் நாட்டுமக்களின் பணத்தை விழுங்குகின்றனர். சொகுசான வாழ்க்கையை வாழ் கின்றனர். ஜெனிவாவில் இருக்கும் எமது இராஜதந்திரிகளை ஊடகங்களில் காட் டினார்கள். இலங்கைக்கு சாதாகமாக வுள் ளது போல காண்பித்தனர். அவர்கள் உண் மை யில் சுறுசுறுப்பாக செயற்பாட்டார்களாக என்பது இதில் தெரியவந்துள்ளது.

அங்கு அவர்களின் செயற்பாடு இன் மையே வெளியானது. மனித உரிமைகள் அமைச்சரைப்போன்று மஹிந்த அரசாங் கமும் நிகழ்ந்துள்ள இந்த விடயத்திற்கு பதில் சொல்ல வேண்டும்.

யாராலும் இலங்கைக்கு சாதகமான முறை யில் இந்த வாக்களிப்பினை மாற்ற முடியா மல் போய்விட்டது. மனித உரிமைகள் ஆணைய உறுப்பினர் பதவி இரத்தானமை எமக்குப் பிரச்சினையானது. அதன் மூலம் ஆடை தயாரிப்பு போட்டாவான ஜி.எஸ்.பி. மானியமும் இல்லாது போய்விடும். அனைத் துலக ரீதியான எமது நாட்டின் மதிப்பு அளிந்து போவதற்கு இது காரணமாகலாம்.

மனித உரிமைகளை மீறும் வேறு நாடு கள் உலகில் உள்ளன. அமெரிக்கா ஈராக் மீது குண்டுவீசுகிறது அது மனித உரிமை மீறல் இல்லையா? அவர்களின் உறுப் புரி மைகளை ரத்துச்செய்யவேண்டும். இது பற்றி வாதிட்டு மோத எமது இராஜதந்திரி களால் முடியாமல் போய்விட்டது. இந்தப் பலவீனம் மக்களின் துயரத்தை அதிகரிக் கும்.

நம் நாட்டில் மனித உரிமைகள் மீறப்பட் டமை குறித்து தர்க்க ரீதியாக அனைத்துல கத்திற்கு எடுத்துக்கூறவேண்டும். மனித உரி மைகள் அமைச்சர், வெளிநாட்டு அலுவல் கள் அமைச்சர் ஆகியோர் எந்தநாளும் இருப் பது வெளிநாட்டில். எனினும் சரியாக நாட் டிற்கு சாதகமான விடயங்களை முன்வைக்க வில்லை. வெளிநாட்டு சவாரி மட்டுமே செய் துள்ளனர்.

எம்மை விட மனித உரிமை மீறல்களில் ஈடுபடும் நாடுகளைப்பற்றி எடுத்துக்கூற வில்லை.

**மனித உரிமைகளை காப்பது தொடர்பில் அரசு மேலதிக கவனம் செலுத்தவேண்டும்- மனோ கணேசன்**

மனித உரிமைகள் சபையில் அங்கத்து வம் கிடைக்காமல் அனைத்துலக ரீதியாக எமக்குக்கிடைத்த அபாய எச்சரிக்கையாகும். மஹிந்த அரசாங்கம் மனித உரிமைகளை காப்பது தொடர்பாக மேலதிக கவனம் செலுத்த வேண்டும் என்பதே இதன் மூலம் தெரிவிக் கப்பட்டிருக்கும் செய்தியாகும்.

அனைத்துலகம் விடுதலைப் புலிக ளுக்கோ பயங்கரவாத இயக்கத்திற்கோ சாதகமாக செயற்படவில்லை. அப்படி குற் றம் சாட்டுவதாயின் அது பொய்யானது. அனைத் துலகம் இந்த தீர்மானத்திற்கு வருவதற்கு முன்னரே விடுதலைப்புலிகளுக்கு எதிராக செயற்பட்டுள்ளது. அமெரிக்கா , பிரிட்டன் உட் பட்ட நாடுகள் விடுதலைப்புலிகளை தடை செய்துள்ளன.

விடுதலைப்புலிகளின் நிதி திரட்டல்களை தடுத்துள்ளது. வங்கிக்கணக்குகளை முடக்கி யுள்ளது. ஆயுதக்கொள்வனவு போன்ற நட வடிக்கைகளுக்காக ஆட்களை கைது செய் துள்ளனர்.

விடுதலைப்புலிகள் அமைப்பை அவர்கள் எவரும் ஆதரவளிப்பதில்லை. அனைத்துல கம் அரசாங்கத்திற்கு எதிராகி இருப்பதற்கு கார ணம் மனித உரிமைகள் மீறப்படுவதே. (அ-5)

## டெலிமெயில் மூலம் ரூபா 25 ஆயிரம் அனுப்பும் வசதி அறிமுகம்

(கொழும்பு)

தபால் திணைக்களத்தின் ஊடாக அனுப் பப்படும் டெலிமெயில் மூலமான பணப் பரிமாற்றத் தொகை 25 ஆயிரம் ரூபா வரை அனுப்பக் கூடிய வசதியை அறி முகப்படுத் தியிருப்பதாக தபால்மா அதிபர் ஏ.திஸா நாயக்க அறிவித்துள்ளார்.

டெலிமெயில் ஊடாக இதுவரை 2500 ரூபா வரை மாத்திரமே பெறக்கூடிய தாக இருந்தது. தபால் திணைக்களத்தின் மூல மான சேவையை மக்களுக்கு பரவலாக்கும் திட்டத்தின் கீழ் இவ் வசதியை ஏற்படுத்திக் கொடுத்திருப்பதாக அவர் தெரிவித்தார்.

கடந்த 10ஆம் திகதி தொடக்கம் இப்புதிய திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. (அ-5)

சொறியச் சொறிய மேலும் மோசமாகும் சிரங்கு போன்றது - விலைவாசி அதிகரிப்பு.
-ஜப்பான்

வலம்புரி

## எரிபொருளின் அதீத விலை அதிகரிப்பு நாட்டின் பொருளாதாரம் அதலபாதாளத்தில்

எரிபொருளின் விலை 2008ஆம் ஆண்டில் இரண்டாவது தடவையாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இம்முறை எரிபொருளின் விலை அதிகரிப்பு எவரும் எதிர்பார்க்காத வகையில் நிகழ்ந்துள்ளது.

அமைச்சரவை விசேடமாகக் கூடி பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் என்பவற்றின் விலையை அதிகரித்துள்ளது.

உலக சந்தையில் ஏற்பட்டுள்ள விலை அதிகரிப்பு அல்லது மசகு எண்ணெயின் விலையேற்றம் எனப் பல நியாயப்பாடுகளை முன்வைத்தாலும், எரிபொருளின் இவ் விலையேற்றத்தால், பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்படுவதுடன் நாட்டின் பணவீக்க நிலைமையும் மிக வேகமாக உயர்வடையும்.

இதனால் ஏனைய பொருட்கள் சேவைகளின் விலைகள் திடீர் அதிகரிப்புக்கு உட்படும் போது, ஏழை மக்கள் பெரும் பாதிப்படைவர்.

அதேசமயம் நாட்டின் பொருளாதாரம் மீள முடியாத அளவுக்கு மோசமடையும். சில வகையான பொருட்கள் விலை அதிகரிப்புக்குள்ளாகும்போது அதனால் ஏற்படும் தாக்கம் மிகவும் குறைவானதாகும்.

ஆனால் எரிபொருளின் விலை அதிகரிப்பு ஏனைய சகல பொருட்கள் சேவைகளினதும் உற்பத்திச் செலவில் அதிகரிப்பை தோற்றுவிக்கும்.

உற்பத்திச் செலவுகள் அதிகரிக்கும்போது பொருட்கள் மற்றும் இதர சேவைகளின் விலைகள் அதிகரிப்பது இயல்பான நிகழ்வாகும்.

உதாரணத்துக்கு பெற்றோலின் விலையும், டீசலின் விலையும் முப்பது ரூபாவால் அதிகரிக்க, மண்ணெண்ணெயின் விலை பத்து ரூபாவாலும் அதிகரித்துள்ளது.

இங்கு ஒரு லீற்றர் டீசலின் விலை முப்பது ரூபாவால் அதிகரிக்கும்போது அதன் நேரடித் தாக்கம் மின்சாரம் மற்றும் போக்குவரத்துச் சேவையில் உடனடியாக ஏற்படும்.

இதனால் மின்கட்டணமும், போக்குவரத்துக் கட்டணமும் அதிகரிக்க ஏனைய துறைகளில் விலையேற்றம் ஏற்படும்.

எனவே இலங்கையில் பொருளாதாரத்தில் 'பாயும் பணவீக்கம்' வேகமெடுக்க, அது நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதாரத்திலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி மக்களின் சீவனோபாயத்திற்கு ஊறு விளைவிக்கும்.

இந்நிலைமை சில காலம் நீடிக்கும்போது பட்டினிச்சாவென்ற கொடூரம் இந்த நாட்டைச் சூழ்ந்துகொள்ளும்.

பொதுவாக பொருளாதாரத்தில் பின்தங்கிய நாடுகள் தமது உற்பத்தி அதிகரிப்பிலேயே கவனம் செலுத்த வேண்டும். அப்போது தான் அந்த நாட்டில் குறைந்த பொருட்களை கூடிய பணம் துரத்தும் நிலை இல்லாது போகும்.

எனினும் இலங்கையில் உற்பத்தித் துறையின் தற்போதைய பங்களிப்புக் கூட எரிபொருள்களின் விலையேற்றத்தினால் வீழ்ச்சியடையும் நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

இது நாட்டின் எதிர்கால பொருளாதாரத்திற்கு ஆரோக்கியமாக அமையாது.

## இரு தினங்களுக்கு சுகவீன விடுமுறையில் செல்ல ஆசிரியர் சங்கங்கள் தீர்மானம்

(கொழும்பு)

ஆசிரியர்கள் நாடளாவிய ரீதியில் இரண்டு தினங்களுக்கு சுகவீன விடுமுறையில் செல்லும் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடத் திட்டமிட்டுள்ளனர்.

உறுதிமொழிகளை வழங்கி விட்டு அவற்றை நடைமுறைப்படுத்தாது காலம் தாழ்த்தும் அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் இந்த தொழிற்சங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் பிரதான செயலாளர் தெரிவித்தார். அதன்படி அடுத்த மாதம் 11 மற்றும் 12ஆம் திகதிகளில் இந்த தொழிற்சங்க நடவடிக்கையை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. கல்வித்துறையைச் சேர்ந்த பல தொழில் சங்கங்கள் ஒருங்கிணைந்து இந்த முடிபை எடுத்துள்ளன.

இலங்கை ஆசிரியர் சேவை சங்கம், கல்விசார் தொழிலாளர் சங்கம், அகில இலங்கை ஐக்கிய ஆசிரியர் சங்கம் ஆகிய தொழிற்சங்கங்கள் இவ்விடயத்தில் ஒருங்கிணைந்துள்ளன. சம்பள நிர்ணய ஆணைக்குழுவின் சம்பள முரண்பாட்டை நீக்க நடவடிக்கை எடுக்கு மாறு கடந்த மார்ச் மாதம் 17ஆம் திகதி ஜனாதிபதியால் உத்தரவிடப்பட்டது. ஆனால் இதுவரை நடைமுறைப்படுத்தவில்லையென இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் பிரதான செயலாளர் குறிப்பிட்டார். இந்த சம்பள முரண்பாட்டுப் போராட்டம் தொடர்பாக கடந்த வருடம் பல தொழிற்சங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கைகள் 25நாட்கள் பகிஷ்கரிக்கப்பட்டன. செப்டெம்பர்13ஆம்திகதி அடையாள வேலை நிறுத்தம் நடத்தப்பட்டது. இவ் வருடமார்ச்மாதம் 4ஆம்திகதி சுகவீன விடுமுறை உட்பட தொழிற்சங்க நடவடிக்கைகள் பல மேற்கொள்ளப்பட்டன.

இவ்வாறான தொழிற்சங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களின் சம்பள முரண்பாடு நிவர்த்தி செய்யப்படவில்லை என தொழிற்சங்கங்கள் கவலை தெரிவிக்கின்றன. (அ-5)

## இலங்கை துறைமுக அதிகார சபையில் பாரிய நிதி மோசடி- 'ராவய' சிங்கள வார ஏடு

(கொழும்பு)

இலங்கை துறைமுக அதிகார சபையில் பாரிய நிதி மோசடி இடம்பெற்றுள்ளதாக ராவய செய்தித்தாள் தகவல் வெளியிட்டுள்ளது. ஹம்பாந்தோட்ட துறைமுகத்திட்டத்திற்காக சுவீகரிக்கப்பட்ட காணி உரிமையாளர்களுக்கு வழங்கப்படவேண்டிய நட்ட ஈட்டுத்தொகையைப் போன்று பல மடங்கு நிதி பெற்றுக்கொள்ளப்பட்டிருப்பதாக தெரியவருகிறது. காணி உரிமையாளர்களுக்கு வழங்கப்படவென சுமார் மூவாயிரம் மில்லியன் ரூபாய் பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் எனினும் 600 மில்லியன் ரூபாவே நட்டஈடாக வழங்கப்பட வேண்டியுள்ளதாகவும் ராவய பத்திரிகை சுட்டிக்காட்டுகின்றது.

ஹம்பாந்தோட்ட துறைமுக அபிவிருத்தித்திட்டத்தினால் பாதிக்கப்படும் காணி உரிமையாளர்களுக்கு சுமார் 575 மில்லியன் ரூபாய் நட்டஈடாக வழங்கப்படவுள்ளதாக பிரதேச செயலர் கணேச அமரசிங்க தெரிவித்தார்.

இதேவேளை ஹம்பாந்தோட்டை துறை முகத்திட்டத்தின் பிரதான பொறியிலாளர் அலுவலகமும் சுமார் 600 மில்லியன் ரூபா மட்டுமே நட்ட ஈட்டுத் தொகையாக வழங்கப்படவுள்ளதாக தெரிவித்துள்ளது.

50 காணிகளை தவிர்ந்த ஏனையோருக்கு ஏற்கனவே நட்ட ஈட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளதாக பிரதேச செயலர் தெரிவிக்கின்றார்.

375 மில்லியன் ரூபாய் நட்டஈட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளதாக ஹம்பாந்தோட்டை துறைமுகத்திட்டத்தின் பிரதான பொறியிலாளர் அலுவலகம் தெரிவிக்கின்றது.

இந்த நிலையில் ஹம்பாந்தோட்டை துறைமுகத்திட்டத்தினால் பாதிப்படையும் காணி உரிமையாளர்களுக்கு நட்ட ஈடுவழங்க 3007 மில்லியன் ரூபா காசோலை வரையப்பட்டுள்ளதாக ராவய சுட்டிக்காட்டுகிறது. (அ-5)

## சர்வதேச அரச சார்பற்ற நிறுவனப் பணியாளர்களுக்கு விசா வழங்குவதற்கு புதிய நிபந்தனைகள் அறிமுகம்

(கொழும்பு)

சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களின் பணியாளர்கள் இலங்கை வருவதற்கான விசா அனுமதி தொடர்பில் இலங்கை அரசாங்கம் புதிய நிபந்தனைகளை அறிமுகப்படுத்தவுள்ளது. இந்த நிபந்தனைகள் தொடர்பான வரையறைகளை உள்நிர்வாக அமைச்சின் செயலாளர் டாக்டர்.யூ.விதானபத்திரன தயாரித்துள்ளார்.

சமூக சேவைகள் நிறுவனங்கள் அல்லது அரசசார்பற்ற நிறுவனங்களில் பணிபுரியும் வெளிநாட்டவர்களுக்கான தொழில்புரிவதற்கான விசா வழங்குவது தொடர்பான வழிமுறைகள் எனும் தலைப்பில் இந்தச் சுற்றுநிருபம் தயாரிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. 2004ஆம் ஆண்டு சுனாமி அனர்த்தத்தின் பின்னர் நாட்டுக்குள் செயற்பட்டுவரும் நூற்றுக்கணக்கான அரசசாற்பற்ற நிறுவனங்களை ஒழுங்குபடுத்தும் நோக்கிலேயே இந்த புதிய நிபந்தனை விதிக்கப்பட்டிருப்பதாக அரசாங்கத் தரப்பில் கூறப்படுகிறது.

சில சமயங்களில் கண்காணிப்புக்கள் இல்லை. பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதாகப் பணத்தை சேகரித்து அந்தப் பணததுடன் இரவோடு இரவாக ஓடும் அரச சார்பற்ற நிறுவனங்களும் காணப்படுவதாக அரசாங்கத் தரப்பில் குற்றஞ்சாட்டப்படுவதுடன் அவற்றைக் கண்காணித்து குற்றச்செயல்களைத் தடுக்கும் நோக்கிலேயே இந்தப் புதிய சுற்றுநிருபம் தயாரிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஒரு சில அரசசார்பற்ற நிறுவனங்கள் தமக்குக் கிடைத்த பணத்தை உல்லாசப் பயணங்களுக்குப் பயன்படுத்து வதாகவும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைத் தேர்தலில் இலங்கைக்கு ஆதரவு வழங்கக் கூடாதென அரசசார்பற்ற நிறுவனங்கள் இணைந்து ஏனைய ஐ.நா உறுப்பு நாடுகளிடம் கோரிக்கை விடுத்திருந்தன. இந்த நிலையில் கடந்த வாரம் இடம் பெற்ற தேர்தலில் இலங்கை தோல்வியடைந்தது. இதன் பின்னணியில் சர்வதேச அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளின் இலங்கை விஜயத்துக்கான விசா அனுமதியில் புதிய நிபந்தனைகளை அரசாங்கம் விதித்துள்ளது. (அ-5)

## ஐம்பது மாணவர்களுக்கு குறைவானோர் ஆயிரத்து 533 பாடசாலைகளில் கல்வி

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் உள்ள அரசாங்கப் பாடசாலைகளில் ஆயிரத்து533 பாடசாலைகள் 50மாணவர்களுக்கும் குறைவான மாணவர்களைக் கொண்டிருப்பதாக கல்வி அமைச்சின் புள்ளி விபரக்கிளை அறிவித்துள்ளது.

நாட்டில் 39இலட்சத்து 42ஆயிரத்து 327 மாணவர்களுக்காக 2இலட்சத்து 9 ஆயிரத்து 277ஆசிரியர்கள் கல்வி கற்பிக்கின்றனர்.

140பாசாலைகளில் 1ஆசிரியரும் 245பாடசாலைகளில் 2ஆசிரியர்களும் மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். 4ஆயிரம் மாணவர்கள் கல்வி கற்கும் 26பாடசாலைகளும் தேசிய பாடசாலைகளாக 328 பாடசாலைகளும் நாடு பூராவும் உள்ளதாகவும் புள்ளி விபரக் கிளை மேலும் தெரிவித்துள்ளது.

நாட்டிலுள்ள ஆசிரியர்களில் 1இலட்சத்து 27ஆயிரத்து 499பேர் பயிற்றப்பட்ட ஆசிரியர்களாகவும் 72ஆயிரத்து 126பேர் பட்டதாரி ஆசிரியர்களாகவும் 7 ஆயிரத்து 87 பேர் பயிற்றப்படாத ஆசிரியர்களாகவும் உள்ளனர்.

19மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற ரீதியில் ஆசிரியர் மாணவர் விகிதாசாரம் உள்ளதாகவும் மேற்படி புள்ளி விபரக்கிளை அறிவித்துள்ளது. (அ-5)

ஓலைச் சுவடிகள் 33

## தெரிந்த கதையும் தெரியாத அர்த்தமும்

நம்பிக்கைகளும் ஆசாரங்களும்

### குவளை (வில்வம்) ஜென்ம பாவங்களை அழிக்கும் என்பது ஏன்?

சிவன் கோயில்களில் குவளை (வில்வம்) மரத்துக்கு புனிதமும் முக்கியத்துவம் நிறைந்ததுமான இடம் அளித்துள்ளனர். சிவ-பார்வதிக்கு மிகவும் விருப்பமான மரத்தின் முட்கள் சக்தி சொரூபமும் கிளைகள் வேதமும் வேர்கள் ருத்திரரூபமுமாகும் என்று கருதப்படுகின்றது.

குவளையில் ஒவ்வொரு இதழும் மூன்றாக பிரிந்திருப்பதைக்காணலாம். இதில் ஒவ்வொரு பாகத்துக்கும் ஒவ்வொரு நன்மை அளிக்கும் இயல்புண்டு. இம்மூன்று பாகங்களையும்பரமசிவனின் மூன்று திருக்கண்களாக பக்தர்கள் போற்றுகின்றனர்.

ஜென்ம பாவங்களை அகற்றும் திவ்ய தாவரமாக குவளையை பக்தர்கள் நம்பி வருகின்றனர். இதில் பார்வைக்கு எட்டாத தெய்வீக அரவணைப்பு எப்போதும் இருப்பதாகவும் பக்தர் கருதுகின்றனர்.

அமாவாசை,பௌர்ணமி நாட்களில் குவளையின் இலையைப் பறிக்கலாகாது என்பது நம்பிக்கை. அனேக மருத்துவ குணங்களுடைய ஓர் உத்தம ஆயுர் வேத மூலிகையாக குவளையை மேல்நாட்டு பல்கலைக் கழகங்கள் ஆராய்ச்சி செய்து வருவதாக 'சயன்ஸ்டுடெய்' பத்திரிகையில் குறிப் பிட்டுள்ளது.

வாதம், கபம்,வாந்தி, காசநோய், வயிற்றுக்கோளாறு என்ற நோய்களிலிருந்து நிவாரணமளிக்கவல்லது. குவளை சிறு நீரக நோய்களுக்கும் இது சிறந்த மருந்தாக பயன்படும். இத்தாவர இலையின் சாறு பிழிந்து காய்ச்சிய எண்ணெய் ,காது வலி, காதில் பழுப்பு முதலிய பிரச்சினைகளிலிருந்து விடுதலையளிக்கும் என்று ஆயுர்வேதம் குறிப்பிட்டுள்ளது. அமாவசை, பௌர்ணமி நாட்களில் இயற்கையில் உண்டாகும் மாறுதல்கள் இத்தாவரத்தை பாதிக்கும் என்பதாலே இந் நாட்களில் இதன் இலைகளைப் பறிக்கலாகாது என்று விதித்துள்ளனர்.

## மனித உரிமை தொடர்பில் கண்காணிக்க அனுமதி மறுப்பு

(கொழும்பு)

வெளிநாட்டு அமைப்புக்கள் இனிவரும் காலத்தில் இலங்கையில் மனித உரிமை விடயங்களை கண்காணிப்பதற்கோ அல்லது ஆராய்வதற்கோ அனுமதி வழங்கப்படமாட்டாது என அரசாங்கம் அறிவித்துள்ளது.

இத்தடையுத்தரவு தொடர்பாக ஜெனீவாவிலுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கு அரசாங்கம் உத்தியோகபூர்வ அறிவிப்பை வழங்கியுள்ளது.

மனித உரிமைகள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டபோதும் சில தன்னார்வ நிறுவனங்களின் கருத்துக்களுக்கு ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை செவிசாய்த்துள்ளதாக அரசாங்கம் குற்றஞ் சுமத்தியுள்ளது. (ச-5)

## உணவுப் பற்றாக்குறை...

நாங்கள் கதைக்கவில்லை. 100 மில்லியன் டொலர் பற்றி கேட்கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

எரிபொருள்களின் விலை அதிகரிப்பைத் தொடர்ந்து உலகளாவிய ரீதியில் உணவுப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதாகத் தெரிவித்திருக்கும் உலக வங்கியின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் உணவுத் தட்டுப்பாட்டை நீக்குவதற்கான நிதியத்தினூடாக உலக வங்கியே சரியான நடவடிக்கையை எடுத்த முதலாவது அமைப்பு எனக் கூறியுள்ளார்.

நாங்கள் 50 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி வழங்கியுள்ளோம். அவை மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன.

இலங்கை போன்ற உணவுத் தட்டுப்பாட்டால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்குவழங்குவதற்கு 800 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி தேவைப்படுகின்றது. சர்வதேச அபிவிருத்தி ஒன்றியத்தின் ஊடாகக் கடன்கள் வழங்கப்படும் என்றார் அவர். (ச-5)

## கட்டுநாயக்கவில் தேடுதல்...

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தொடர்ந்து கூறியதாவது, பொலிஸார் விமானப் படையினர் மற்றும் சிவில் பாதுகாப்புக் குழுவினர் ஆகியோர் இணைந்து நேற்றுக் காலை மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப் புத் தேடுதலின்போதே 14 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் பெரும்பாலானவர்கள் கட்டுநாயக்க வர்த்தக நிலையத்தில் சேவையாற்றி வருவதாகவும் பொலிஸ் மேற்கொண்ட விசாரணைகளின்போது தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட அனைவரும் தமிழர்கள் என்பதோடு அவர்களில் பலர் வடக்குக் கிழக்கு மற்றும் மலையகப் பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

கைது செய்யப்பட்ட அனைவரும் கட்டுநாயக்க பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன் பொலிஸ் விசாரணைகளை அடுத்து அவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்காக கட்டுநாயக்கப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-5)


# திருமண வாழ்த்து



தெல்லிப்பழை துர்க்கை அம்மன் திருமண மண்டபத்தில் 24.05.2008 அன்று இல்லறம் எனும் நல்லறத்தில் இணைந்த அளவெட்டியைச் சேர்ந்த

காண்டீபன் - தில்லைநாயகி

தம்பதிகளை அளவெட்டி ஸ்ரீ முத்துமாரி அம்மன் துணை கொண்டு பதினாறும்பெற்று பல்லாண்டு காலம் வாழ்க வென வாழ்த்து கின்றோம்.

இ. தங்கவடிவேல் (மாமன், மாமி, மைத்துனர்.)
இல. 81, பொற்பதி வீதி, கொக்குவில்.
(C-1163)


## வீரவன்சவின் கட்சியிலிரு...

பரீட்சை எதிர்வரும் வாரத்தில் நடைபெறவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

ஜே.என்.பி. தொடர்பாக சட்ட சிக்கல்கள் ஏற்பட்டால் அதிலிருந்து விடுபடுவதற்காக இந்தப் புதிய கட்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ஜே.என்.பியின் சிரேஷ்ட தலைவர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை யப்பானிலுள்ள ஜே.வி.பியின் கிளையிலும் பிளவு ஏற்பட்டுள்ளது. யப்பான் ஜே.வி.பியின் அமைப்பாளர் சமன் பிரியங்கர, கட்சித் தலைமையகத்திற்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில், இனிதான் நன்கொடை எதனையும் அளிக்கப் போவதில்லை என்று கூறியுள்ளார்.

ஆனால் யப்பானின் ஜே.வி.பியில் எதுவித பிளவும் இல்லை என்று அக் கட்சியின் சர்வதேச விவகாரங்களுக்கான குழுவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விஜித்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

சமன் பிரியங்கரவைப் பொறுத்தவரையில் ஒரு தனி நபரே என்றும் அவர் தனது ஆதரவை விலக்கிக் கொண்டமையால் ஒட்டு மொத்த யப்பான் ஜே.வி.பியும் எம்மை ஆதரிக்காமல் இல்லை என்றும் கூறியுள்ளார்.(ச-5)

## விலைவாசி ஏற்றம் குறித்து...

யில் விலை ஏற்றம் எங்களைச் சாராது என்றும் விலைகளை உயர்த்த மாட்டோம் என்றும் உறுதி மொழிகளை வழங்கியே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது.

உலக சந்தையில் எரிபொருள்களின் விலைகள் அதிகரித்தால் அது எம்மைப் பாதிக்கும் என ஐ.தே.க. அன்று உண்மையைத் தெரிவித்தது.

ஆனால் மக்கள் உண்மையை உதா சீனம் செய்து பொய் வாக்குறுதிகளுக்கு வாக்களித்தனர். இன்று அதன் பலாபலன்களை அனுப விக்கின்றனர். ஒரு புறம் யுத்தத்தை காட்டிக் கொண்டு அரசின் ஊழல் மோசடிகள், வீண் விரயங்கள் மறைக்கப் படுகின்றன.

மறுபுறம் மக்களின் அன்றாட அத்தியாவசியப் பொருள்களின் விலைகளை உயர்த்திக் கொண்டே போகின்றது. எரிபொருள், உலக சந்தை விலையேற்றத்தால் விலை அதிகரித்தது என்று சொன்னாலும் உள்ளூர் உற்பத்திகளின் விலைகளும் அதிகரித்துக் கொண்டு செல்கிறதே? இதற்கு என்ன காரணம்?

பண வீக்கம் அதிகரித்துச் செல்கின்றது. நாளுக்கு நாள் மக்கள் வாழ்க்கைச் சுமையை தாங்கிக் கொள்ள முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். அரசாங்க நிதி நிர்வாகம் மோசமடைந்துள்ளது.

நாடு பின்நோக்கிச் செல்கின்றது. பொருளாதாரம் பாரிய நெருக்கடிகளைச் சந்தித்துள்ளது. பொய்யான வாக்குறுதிகளுக்கு ஏமாறிய மக்கள் இன்று நெருக்கடிகளைச் சந்தித்துள்ளனர்.

உலக நாடுகளில் விலை ஏற்றங்களை எதிர்த்து இன்று மக்கள் வீதியில் இறங்கிப் போராட்டங்களை ஆரம்பித்துள்ளனர்.

ஆனால் எமது நாட்டு மக்கள் விழிப்புணர்வு இன்றியுள்ளனர். எனவே மக்கள் விழிப்படைய வேண்டும் என்றார். (ச-5)


உயர்ச்சிப் பாதையில் இணைவதற்கு ஓர் அரிய வாய்ப்பு

தரம் 04 தொடக்கம் O/L வரை.

35

1973 - 2008

இவ்வருடத்திற்கான அனுமதி வழங்கும் இறுதிச் சந்தர்ப்பம்

இன்று முதல் மே 31 வரை மட்டுமே

The Express Institute
irupalai, Kopay
அதிபர்


## சகல...

லிருந்து 7 ரூபாவாகவும் 8 ரூபா பஸ் கட்டணம் 10 ரூபாவாகவும் 11 ரூபா பஸ் கட்டணம் 14 ரூபாவாகவும் 16 ரூபா கட்டணம் 20 ரூபாவாகவும் உயர்த்த முடிபுபெடுக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று ஏனைய பஸ் கட்டணங்களும் அதிகரிக்கப்படவுள்ளன. இப்புதிய நடை முறை இன்று நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் எனவும் அவர் கூறினார். (ச)

## ஜனநாயகத்தைக் காக்க...

மைக்குச் சமனாகும்.

சுதந்திர ஊடகங்கள் தமது பணிகளைக் காத்திரமாகச் செய்வதற்கு இடமளிக்கப்படுவதில்லை. உண்மையைச் சொல்வதற்காக ஊடகங்கள் அதிக விலையைக் கொடுக்க வேண்டியுள்ளதையும் குறித்த சர்வதேச செய்தியாளர் மாநாட்டில் தாம் சுட்டிக்காட்டிய தாக இக்பால் அத்தாஸ் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு உதாரணமே த நேசன் ஊடகவியலாளர் கெய்த் தாக்கப்பட்டமையாகும் என இக்பால் அத்தாஸ் தமது பாதுகாப்பு ஆய்வில் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந் நிலையில் கெய்த்தைக் கடத்திச் சென்றவர்கள், அவர் இராணுவம் தொடர் பான தகவல்களை எங்கிருந்து பெறுகின்றார் என்பதையும் விசாரணை செய்ததாக அத்தாஸ் குறிப்பிட்டுள்ளார். (ச-5)


# மரண அறிவித்தல்



## கனகு வின்ரன்

சுண்டுக்குளி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட கனகு வின்ரன் 23.05.2008 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற கனகு, நல்லம்மாவின் அன்பு மகனும், சிவபாக்கியத்தின் (பிரான்ஸ்) அன்புக் கணவரும், செல்ரன் (பிரான்ஸ்), சாந்தினி (பிரான்ஸ்), காலஞ்சென்ற சுவேந்தினி, இன்பம் (பிரான்ஸ்), பழம் (பிரான்ஸ்), தேவராணி (சுழிபுரம்), சொயிற்றா (சுவிஸ்), செலஸ்ரீன் (பிரான்ஸ்), அனுஷா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற புஷ்பராணி, துரைசிங்கம் (பிரான்ஸ்), பாலா (லண்டன்), ராசு (பிரான்ஸ்), துரை (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், கீதா (பிரான்ஸ்), பரசிங்கம் (பிரான்ஸ்), கேதீஸ்வரன் (பிரான்ஸ்), சங்கர் (பிரான்ஸ்), ஈசன் (பிரான்ஸ்), ராசா (சுழிபுரம்), வர்ப்பன் (பிரான்ஸ்), டெறீன் (பிரான்ஸ்), மதன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் சுழிபுரத்திலுள்ள ராசாவின் இல்லத்தில் நடைபெற்று 26.05.2008 இன்று பி.ப.2 மணியளவில் அன்னாரின் சொந்த இடமான சுண்டுக்குளி, யாழ்ப்பாணத்திற்குப் பூதவுடல் நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்,
அப்புக்குட்டி சற்குணராசா (ராசா)
சுழிபுரம் மத்தி, சுழிபுரம்.
(1303)


## தேசிய மட்ட தமிழ்த் தினப் போட்டி...

வாசகர் வித்தியாலயம்), இலக்கணப் போட்டி-பிரிவு IV த. தாரணி (வேம்படி மகளிர் கல்லூரி). பிரிவு V கு.ஐ.கிருஸ்ரலா (அருணோதயாக் கல்லூரி), பேச்சு-பிரிவு III அ.உமாகரன் (யாழ்.இந்துக் கல்லூரி), பிரிவு IV உ.திருமாறன் (தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி), பிரிவு V ச.கோபிநாத் (யாழ். மத்திய கல்லூரி),

தனிநடனம் - பிரிவு I ந.அபிராமி (தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி) பிரிவு II க.கௌதமன் (யாழ். மத்திய கல்லூரி), பிரிவு IV பி.பிரவீணா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி),

குழு நடனம் - பிரிவு I யாழ்.மத்திய கல்லூரி), தமிழறிவு வினாடி வினாப் போட்டி (குழு)- தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி), இசை தனி - பிரிவு IV க.தசாங்கன் (தெல்லிப்பழை யூனியன் கல்லூரி). பிரிவு V செ.சந்திரிகா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), இசை -குழு பிரிவு I (பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி), பிரிவு II (சாவகச்சேரி இந்துக் கல்லூரி). (ச-5)

## இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை...

இலங்கையில் அதிகரித்திருக்கும் மனித உரிமை மீறல்களைத் தொடர்ந்து இலங்கைக்கான உதவிகள் குறித்து கடந்த வருடமே கடுமையான நிலைப்பாட்டை எடுத்திருந்த ஜேர்மனி உள்ளிட்ட ஸ்கன்டிநேவிய நாடுகள் தற்போது இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை நிறைவேற்றிக் கொள்ள முயற்சிப்பதாகத் தெரியவருகின்றது.

எனினும் இலங்கைக்கு எதிரான தீர்மானம் உத்தியோகபூர்வமாகத் தயாரிக்கப்பட்டு முன்வைக்கப்படவில்லை எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கைக்கு எதிரான தீர்மானம் கடந்த வருடமே முன்வைக்கப் படவிருந்தபோதும் ஐரோப்பிய ஒன்றியத்தின் 27 நாடுகளும் அதற்கு ஒத்துழைப்பு வழங்குமா? என்ற சந்தேகத்தால் அந்தத் தீர்மானம் முன்வைக்கப்படவில்லை.

இந்த நிலையில் கடந்த வாரம் நியூயோர்க்கில் இடம்பெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகளைத் தேர்ந்தெடுக்கும் தேர்தலில் இலங்கை தோல்வி கண்டிருந்தது.

இதனைப் பயன்படுத்தி இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை நிறைவேற்ற ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் தற்போது முயற்சிக்கின்றன.

எவ்வாறாயினும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் அனைத்தும் இலங்கைக்கு எதிரான தீர்மானத்திற்கு ஆதரவு வழங்குமா? என்ற சந்தேகம் தொடர்ந்தும் இருப்பதால் ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றத்தில் கடுமையான கண்டனங்களை வெளியிடுவதற்கும் முயற்சிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

2007 -2013 ஆம் ஆண்டுக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் திட்டங்கள் அடங்கிய அறிக்கையில் 2006 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் மனித உரிமை மீறல் நிலைமைகள் மிகவும் மோசமடைந்து வந்துள்ளன என்றும் இது மேலும் பல மனித உரிமை மீறல்களுக்கு வழி வகுக்கலாம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையிலிருந்து இலங்கை நீக்கப்பட்டுள்ள நிலையில் ஐரோப்பிய ஒன்றியத்தால் இலங்கைக்கு வழங்கப்பட்டு வரும் ஜீ.எஸ்.பி.பிளஸ் வரிவிலக்கீட்டை இரண்டாவது தடவையாகவும் நீடிக்கும் விடயத்தில் ஐரோப்பிய ஒன்றியம், இலங்கை அரசாங்கத்துடன் வாதங்களில் ஈடுபடலாம் என இராஜதந்திரிகள் நம்புகின்றார்கள் எனினும் ஜீ.எஸ்.பி.பிளஸ் மீண்டும் நீடிக்கப்படும் என நமபிக்கை தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.05.2008 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.